தமிழ்ப் பொழில்

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௭	பிரசோற்பத்தி, மாசி.	மலர் ௰௧

திருக்குறளும் கம்பரும்

பண்டிதர், R. P. அமிர்தலிங்கம் பிள்ளையவர்கள், நன்னிலம்.

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரால் திருவாய் மலர்ந்தருளப்பெற்ற ஒப்புயர்வற்ற திப்பிய நூலாகிய திருக்குறளின் அருமை பெருமைகளைத் தமிழுலகேயன்றி ஏனையுலகங்களும் நன்கறியும். இத்தகைய திருக்குறளென்னும் நூலின் கண்ணுள்ள, திருக்குறட்பாக்களையும், அவற்றின் கருத்துக்களையும், சொற்களையும், சொற்றொடர்களையும் எடுத்தாளாத தமிழ் நூலாசிரியர் எவருமே இல்லையெனக்கூறுதல் தவறாகாது. அவ்வாறு திருக்குறளை எடுத்தாண்ட புலவர் பெருமக்களுள் கம்பரும் ஒருவர். கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரின் கவிச்சிறப்பைத் தமிழுலகம் நன்கறியுமாகலின், அவர் தாம் இயற்றியுள்ள 'இராமாயணம்' என்னும் அரும்பெருங்காப்பியத்தில் திருக்குறட்பாக்களையும் அவற்றின் கருத்துக்களையும் சொற்களையும் சொற்றொடர்களையும் அழகுபெற அமைத்துள்ள செய்யுட்களில் என் ஆராய்ச்சியிற்கண்ட சில செய்யுட்களை ஈண்டு எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1 தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை

(இ-ள்) பிறதெய்வந் தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத் தொழாநின்று துயிலெழுவாள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும். (எ-று.) இத்திருக்குறள்,

பொற்பி னின்றன பொலிவு பொய்யிலா
நிற்பி னின்றன நீதி மாதரார்
அற்பி னின்றன அறங்க ளன்னவர்
கற்பி னின்றன கால மாரியே.

தங்கணா யகரிற் றெய்வம் தவம்பிறி திலவென் றெண்ணும்
மங்கைமார் சிந்தை போலத் தூயது மற்றுங் கேளாய்
எங்கணா யகர்க்குந் தேவ ரறிவிற்கும் பிறர்க்கு மெட்டாச்
செங்கண்மா விருந்து மேனாள் செய்தவம் செய்த தென்றான்

என்ற செய்யுட்களில் எடுத்தாளப் பெற்றிருத்தல் காண்க.

2 பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்

(இ-ள்) ஒருவன் (புறமாகிய செல்வத்தின் கண்ணும் அகமாகிய யாக்கையின் கண்ணுமுள்ள) இருவகை பற்றுமற்ற பொழுதே அப்பற்றறுதி அவன் பிறப்பையறுக்கும்; அவை யறாதபொழுது அவற்றாற் பிறந்திறந்து வருகின்ற நிலையாமை காணப்படும். (எ-று.) இத்திருக்குறட் கருத்தை,

பற்றவா வேரொடும் பசையறப் பிறவிபோய்
முற்றவா வுணர்வுமேல் முடுகினா ரறிவுசென்
றுற்றவா னவனிருந் தியோகுசெய் தனனெனில்
சொற்றவா மளவதோ மற்றிதன் தூய்மையே

என்ற செய்யுளில் அமைத்திருத்தல் காண்க.

3 கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉ மின்றிக் கெடும்

(இ-ள்) ஒருவன் பிறர்க்குக் கொடுப்பதன்கண் பொறாமைப் படுபவனது சுற்றம் உடுக்கப்படுவதும் உண்ணப்படுவதுமின்றிக் கெடும். (எ-று.) இதன் கருத்தினை,

எடுத்தொரு வருக்கொருவர் ஈவதனின் முன்னே
தடுப்பது நினக்கழகித் தோதகைவில் வெள்ளி
கொடுப்பது விலக்குகொடி யோயுனது சுற்றம்
உடுப்பதுவு முண்பதுவு மின்றிவிடு கின்றாய்

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

4 இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்ப துடைத்து

(இ-ள்) தம்மை அவமதித்து இழிவு சொல்லாது பொருள் கொடுப்பாரைக் கண்டால் அவ்விரப்பாரது உள்ளம் மகிழ்ந்து உள்ளுள்ளே உவக்கும் தன்மையுடைத்து. (எ-று.)

5 நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று

(இ-ள்) ஏற்றல் வீட்டுலகிற்கு நல்லநெறியென்பார் உள ராயினும் அது தீது; ஈந்தார்க்கு அவ்வுலகமில்லையென்பார் உளராயினும் ஈதலே நன்று. (எ-று.)

இவ்விரு குறட்பாக்களின் கருத்துக்களையும்

வெள்ளியை யாதல் விளம்பினை மேலோர்
வள்ளிய ராக வழங்குவ தல்லால்
எள்ளுவ வென்சில இன்னுயி ரேனும்
கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால்

என்ற செய்யுளில் அமைத்திருத்தல் காண்க.

6 வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்

(இ-ள்) தம்மாட்டு வசையுண்டாகாமல் வாழ்வாரே உயிர் வாழ்வாராவார்; புகழுண்டாகாமல் வாழ்வாரே இறந்தவராவார். (எ-று.) இத்திருக்குறளை,

மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கண் மாயா
தேந்திய கைகொ டிரந்தவ ரெந்தாய்
வீய்ந்தவ ரென்பவர் வீய்ந்தவ ரேனும்
ஈந்தவ ரல்ல திருந்தவர் யாரே

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

7 உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து

(இ-ள்) கைம்மாறுன உதவி காரணத்தானும், பொருளானும், காலத்தானுமாகிய மூவகையானும் முன்செய்த உதவியின் அளவிற்றன்று அதனைச் செய்வித்துக் கொண்டவர் தம் அமைதியளவிற்று. (எ-று.) இத்திருக்குறட் கருத்து,

கயந்தரு நறும்புனல் கையிற் றீண்டலும்
பயந்தவர் களுமிகழ் குறளன் பார்த்தெதிர்
வியந்தவர் வெருக்கொள விசும்பி னோங்கினன்
உயர்ந்தவர்க் குதவிய உதவி யொப்பவே

என்ற செய்யுளில் அமைந்திருத்தல் காண்க.

8 கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில

(இ-ள்) காமத்திற்குரிய இருவருள் ஒருவர் கண்களோடு ஒருவர் கண்கள் நோக்கானொக்குமாயின், அவர் வாய்மை தோன்றச் சொல்லுகின்ற வாய்ச்சொற்கள் ஒரு பயனுமுடையனவல்ல. (எ-று.) இத்திருக்குறளை,

எண்ணரு நலத்தினா ளினையள் நின்றுழி
கண்ணொடு கண்ணினை கௌவி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெறா துணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினா னவளு நோக்கினாள்

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

9 பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது

(இ-ள்) தன்னின் வலிதாய கூகையைக் காக்கை பகற்பொழுதின்கண்வெல்லா நிற்கும்; அதுபோல பகைவரது மாறுபாட்டை வெல்லக் கருது மரசர்க்கு அதற்கேற்ற காலம் இன்றியமையாது. (எ-று.)

இத்திருக்குறளில் கூறப்பெற்றுள்ள உவமையை

மற்காக்கு மணிப்புயத்து மன்னனிவன் மழவிடைபோன்
விற்காக்கும் வாளமருள் மெலிகின்றா னெனவிரங்கி

எற்காக்கு முடிவிண்ணோர் படையிந்தா ரெனவேந்தர்
அற்காக்கை கூகையைக்கண் டஞ்சினவா மெனவகன்றார்

என்றசெய்யுளில் 'அற்காக்கை கூகையைக்கண்டஞ்சினவாமென' என்றுமாற்றி யமைத்திருத்தல் காண்க.

10 ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரு முட்குமென் பீடு

(இ-ள்) போர்க்களத்து வந்து நேராத பகைவரும் நேர்ந்தார்வாய்க் கேட்டஞ்சுதற் கேதுவாய என்வலி இம்மாதரது ஒள்ளிய நுதலொன்றற்குமே அழிந்து விட்டது. (எ-று.)

இத்திருக்குறளை,

கன்ன வின்கருப் புச்சிலை யான்விரை
பொன்னை முன்னிய பூங்கணை மாரியால்
என்னை யெய்து தொலைக்குமென் றாலினி
வன்மை யென்னுமி தாரிடை வைகுமே

என்ற செய்யுளில் அமைத்திருத்தல் காண்க.

11 அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று

(இ-ள்) ஒருபொருளு மிலராயினார்க்கு அவர் வேண்டிய தொன்றனைக் கொடாதானது செல்வம், பெண்டிரின் மிக்க நலத்தினைப் பெற்றாளொருத்தி கொடுப்பாரின்மையிற் கொழுநனின்றித் தமியளாய் மூத்த தன்மைத்து. (எ-று.)

இத்திருக்குறளிற் கூறப்பெற்றுள்ள உவமையை,

அன்றமுத வின்றளவு மாருமிந்தச் சிலையநுகு
சென்றுமிலர் போயொளித்தார் தேர்வேந்தர் திரிந்துமிலர்
என்றுமினி மணமுமிலை யென்றிருந்தே மிவனேற்றின்
நன்றுமலர்க் குழற்சிதை நலம்பழுதா காதென்றான்

என்ற செய்யுளில் நயம்பெற அமைத்திருத்தலை ஓர்ந்துணர்க.

12 பாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
பாரினும் யாரினும் என்று

(இ-ள்) காம நுகர்தற்குரிய இருவராயினார் யாவரினும்

யாம் மிக்க காதலையுடையேமென்பது கருதி யாரினும் காதல மென்றேனாக, நின்தோழி அது கருதாது என்னால் காதலிக்கப் பட்ட மகளிர் பலருள்ளும் நின்கண் காதலுடையேன் என்றேனாகக் கருதி அம்மகளிர் யாரினும் என்கட் காதலுடையீராயினீர் என்று சொல்லிப் புலந்தாள். (எ-று.)

(இது தலைமகள் புலவிக் குறிப்பினைக்கண்டு நீவிர் கூடியொழுகா நிற்கவும் இது நிகழ்தற்குக் காரணம் யாதென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.) இத்திருக்குறட் கருத்து,

போரென்ன வீங்கும் பொருப்பன்ன பொலங்கொ டிண்டோள்
மாரன்ன னையான் மலர்கொய் திருந்தானை வந்தோர்
காரன்ன கூந்தற் குயிலன்னவள் கண்புதைப்ப
ஆரென்ன லோடு மனலென்ன வெய்துயிர்த்தாள்

என்ற செய்யுளில் ஒருவாறமைந் திருத்தல் காண்க.

13 அறைபறை யன்னர் கயவர் தாம்கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்

(இ-ள்.) தாங்கேட்ட மறைகளை இடந்தோறுந் தாங்கிக் கொண்டு சென்று பிறர்க்குச் சொல்லுதலான் கயவர் அறையப் படும் பறையினையொப்பர். (எ-று.)

இத்திருக்குறளை,

நறைகம ழலங்கன் மாலை நளிநறுங் குஞ்சி மைந்தர்
துறையறி கலவிச் செவ்வித் தோகையர் தூசு வீசி
நிறையக லல்குல் புல்குங் கலன்கழித் தகல நீத்தார்
அறைபறை யன்ன நீரார் அருமறைக் காவ ரோதான்

என்ற செய்யுளில் நயம்பெற அமைத்திருத்தலை ஆழ்ந்து நோக்குக.

14 ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்

(இ-ள்) பயனை விலக்குவதாய ஊழினையும் புறங் காண்பர் அவ்விலக்கிற் கிளையாது வினையைத் தாழ்வற முயல்வார். (எ-று)

15 மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்

(இ-ள்) தன் மயிர்த்திரளின் ஒரு மயிர் நீங்கினும் உயிர் வாழாத கவரிமாவையொப்பார் உயிர் நீங்கத் தான் மானமெய்து மெல்லைவரின் அதனைத் தாங்கா திறப்பர். (எ-று)

இவ்விரு குறட்பாக்களின் கருத்துக்களும்,

உற்றது கொண்டு மேல்வந் துறுபொரு ளுணருங் கோளார்
மற்றது வினையின் வந்த தாயினும் மாற்ற லாற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவ ரரிய நாலும்
கற்றவர் மான நோக்கிற் கவரிமா வனைய நீரார்

என்ற செய்யுளில் அமைந்திருத்தல் காண்க.

16 ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு

(இ-ள்) உலக நடையை விரும்பிச் செய்யும் பெரிய அறிவினையுடையவனது செல்வம் ஊரின் வாழ்வார் தண்ணீருண்ணுங் குளம் நீர் நிறைந்தாற்போலும். (எ-று)

17 பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கட் படின்

(இ-ள்) செல்வம் ஒப்புரவு செய்வான் கண்ணே படுமாயின் அது பயன்படு மரம் ஊர் நடுவே பழுத்தாற் போலும். (எ-று.)

இவ்விரு குறட்பாக்களினுமுள்ள உவமைகள்,

ஊருணி நிறையவும் உதவு மாடுயர்
பார்கெழு பழுமரம் பழுத்தற் றாகவும்
கார்மழை பொழியவும் கழனி பாய்நதி
வார்புனல் பெருகவும் மறுக்கின் றூர்கள்யார்

என்ற செய்யுளில் எடுத்தாளப் பெற்றிருத்தல் காண்க.

18 பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கட் டங்கிற் றுலகு

(இ-ள்) வேண்டியவழிப் பகையை வேறுபடுத்துத் தனக்கு நட்பாகச்செய்துகொண்டொழுகும் இயல்பினையுடைய அரசனது பெருமையுள்ளே அடங்கிற்று உலகு. (எ-று.)

இத்திருக்குறட்பொருள்,

யாரொ டும்பகை கொள்ளில னென்றபின்
போரொ டுங்கும் புகழொடுங் காதுதன்
தாரொ டுங்கல் செல்லாதது தந்தபின்
வேரொ டுங்கெடல் வேண்டலுண் டாகுமோ

என்ற செய்யுளில் அமைந்திருத்தல் காண்க.

19 சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில்

(இ-ள்) தன்னை விழைந்தார்க்கு முன்னில்லாத துன்பங்கள் பலவற்றையும் விளைத்து, உள்ள புகழையும் கெடுக்கும் சூது போல் நல்குரவினைக் கொடுக்கவல்லது பிறிதொன்றில்லை. (எ-று)

இத்திருக்குறளை,

சூது முந்துறச் சொல்லிய மாத்துயர்
நீதி மைந்த நினக்கிலை யாயினும்
ஏத மென்பன யாவையு மெய்துதற்
கோது மூல மதுவென வோர்தியே

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

20 ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்

(இ-ள்) தன்னை விலக்குதற் பொருட்டுத் தனக்கு மறுதலை யாவதோருபாயத்தைச் சூழினும் தான் அவ்வுபாயமேயானும் பிறிதொன்றானும் வழியாக வந்து அச்சூழ்ச்சியின் முற்பட்டு நிற்கும் அதனால் ஊழ்போல மிக்க வலியுடையன யாவையுள (எ-று.) இத்திருக்குறளை,

வாழ்வினை நுதலிய மங்க லத்துநாள்
தாழ்வினை யதுவரச் சீரை சாற்றினன்
சூழ்வினை நான்முகத் தொருவர்ச் சூழினும்
ஊழ்வினை யொருவரா லொழிக்கற் பாலதோ

என்ற செய்யுளில் அமைத்திருத்தல் காண்க.

21 ஒலித்தக்கா லென்னா முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும்

(இ-ள்) எலியாயபகை திரண்டு கடல்போல ஒலித்தால் நாகத்திற்கு என்ன ஏதம்வரும்; அந்நாகமுயிர்த்த துணையானே அதுதானே கெடும். (எ-று.)

இத்திருக்குறளை,

எலியெலா மிப்படை யரவம் யானென
ஒலியுலாம் சேனையை யுவந்து கூவினான்
வலியுலாம் உலகினில் வாழும் வள்ளுகிர்ப்
புலியெலா மொருவழி புகுந்த போலவே

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

22 வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
மீண்டு முயலப் படும்

(இ-ள்) முயன்றால் தாம் வேண்டிய பயன்கள் வேண்டியவாறே பெறலாமாதலால் செய்யப்படுவதாய தவம் அறிவுடையோரான் முயலப்படும். (எ-று.)

23 இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று

(இ-ள்) பலசுடரையுடைத்தாய பேரெரி வந்து தோய்ந்தாலொத்த இன்னாதவற்றை ஒருவன் செய்தானாயினும் அவனை வெகுளாமை ஒருவர்க்குக் கூடுமாயின் அது நன்று. (எ-று.)

இவ்விரு திருக்குறட் கருத்துக்களையும்,

வேண்டின வேண்டினர்க் களிக்கு மெய்த்தவம்
பூண்டுள ராயினும் பொறையி னாற்றலால்
மூண்டெழு வெகுளியை முதலி னீக்கினார்
ஆண்டுறை யரக்கரா லலைப்புண் டாரரோ

என்ற செய்யுளில் அமைத்திருத்தல் காண்க.

24 இறலீனு மெண்ணாது வெஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னும் செருக்கு

(இ-ள்) பின் விளைவதறியாது ஒருவன் பிறன் பொருளை

வெளவக்கருதின் அக்கருத்து அவனுக்கு இறுதியைப் பயக்கும் அப்பொருளை வேண்டாமையென்னும் செல்வம் வெற்றியைப் பயக்கும். (எ-று.) இத்திருக்குறட் கருத்தை,

அன்றிடை வளைந்தவர் குலங்களொ டடங்கச்
சென்றுலை வுறும்படி தெரிந்துகணை சிந்த
மன்றிடை நலிந்துவலி யோர்களெளி யோரைக்
கொன்றனர் நுகர்ந்த பொருளிற்கடிது கொன்ற

என்ற செய்யுளில் அமைத்திருத்தல் காண்க.

25 அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும்

(இ-ள்) ஒருவனை அன்புபற்றி விழையாது பொருள்பற்றி விழையும் மகளிர் அது கையுறுந் துணையும் தாம் அன்புபற்றி விழைந்தாராகச் சொல்லும் இனியசொல் அவனுக்குப் பின் இன்னாமையைப் பயக்கும். (எ-று.)

இத்திருக்குறளில் "அன்பின்.......விழையும்" எனக் கூறியிருப்பதற்கொப்ப,

கலைமான் முதலா யினகண் டவெலாம்
அலைமா னுறுமா சையின்வந் தனவால்
நிலையா மனவஞ் சனைநே யமிலா
விலைமா தர்கண்யா ரும்விழுந் தெனவே

என்ற செய்யுளில் நேயமிலா விலைமாதர் எனக் கூறியிருத்தல் காண்க.

26 மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை

(இ-ள்) பிறப்பறுத்தலை மேற்கொண்டார்க்கு அதற்குக் கருவியாகிய உடம்பும் மிகையாம்; ஆனபின் அதற்கு மேலே இயைபில்லனவும் சில தொடர்ப்பாடுளவாதல் என்னும். (எ-று.)

இத்திருக்குறளை,

வேதமும் வேதிய ருளும் வெஃகலா
சேதனை மன்னுயிர் தின்னுந் தீவினைப்

பாதக வரக்கர்தம் பதியின் வைகுதற்
கேதுவென் னுடலமு மிகையென் றெண்ணுவோய்

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

27 அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர்

(இ-ள்) ஒருவன் கொடாமைப் பொருட்டு சுற்றத்தார் நட்டார் கண் அன்பு செய்தலையொழிந்து வேண்டுவன நுகராது தன்னைச் செறுத்து வறியார்க்கு ஈதல் முதலிய அறத்தை நினைப்பதும் செய்யாது ஈட்டிய ஒள்ளிய பொருளைக் கொண்டு போய்ப் பயன் பெறுவார் பிறர். (எ-று.) இக்குறட்கருத்தை,

திண்டே ரழித்தாங்கவன் திண்புறம் சேர்ந்ததூணி
விண்டான் மறைப்பச் செறிகின்றன வில்லிலாமை
மண்டா ரமர்தான் வழங்காமையின் வச்சைமாக்கள்
பண்டார மொக்கின்றன வள்ளுகிராற் பரித்தான்

என்ற செய்யுளில் அழகுபெற அமைத்திருத்தல் காண்க.

28 அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்தில் தீர்ந்தாரு மில்

(இ-ள்) அழுக்காற்றைச் செய்து பெரியராயினருமில்லை; அச்செயலிலாதார் பெருக்கத்தில் நீங்கினருமில்லை. (எ-று.)

இத்திருக்குறளை,

ஆற்றாராகில் தம்மைக்கொண் டடங்கா ரோவென்னுருயிர்க்குக்
கூற்றாய்நின்ற குலிச்சனகி குவளைமலர்ந்த தாமரைக்குத்
தோற்றுயதனு னகங்கரிந்தாய் மெலிந்தாய் வெதும்பத்தொடங்
மாற்றார்செல்வம் கண்டழிந்தால் வெற்றியாக வற்றுமோ [கினுய்

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருக்கும் நயம் காண்க.

29 கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்

(இ-ள்) நூல்களைக் கல்லாத ஒருவன் யான் அறிவுடையேன் எனத் தன்னைமதிக்கும் மதிப்பு அவற்றைக் கற்றவன் கண்டு உரையாடக்கெடும். (எ-று.)

இத்திருக்குறளை,

அயர்வில் கேள்விசா லறிஞர் வேலைமுன்
பயில்வில் கல்வியார் பொலிவில் பான்மைபோல்
குயிலு மாமணிக் குழுவு சோதியால்
வெயிலும் வெள்ளிவெண் மதியு மேம்பட

என்ற செய்யுளில் உவமையாகக் கூறியிருத்தல் காண்க.

30 கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி

(இ-ள்) கேள்வியால் துளைக்கப்படாத செவிகள் தம்புலமாய ஓசை மாத்திரத்தைக் கேட்குமாயினும் செவிடாந் தன்மையவேயாம். (எ-று.) இத்திருக்குறட் கருத்தை,

வீட்டினுக் கமைவ தான மெய்ந்நெறி வெளியிற் றாகக்
காட்டுறு மறிஞ ரென்ன அன்னவன் கழறிற் றெல்லாம்
கேட்டன னென்ப மன்னோ கேள்வியாற் செவிகள் முற்றும்
தோட்டவ ருணர்வி னுண்ணு மமுதத்தின் சுவையாய்

என்ற செய்யுளில் அமைத்திருத்தல் காண்க. [நின்றுன்

31 பெருமைக்கு மேனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்

(இ-ள்) பிறப்புக் குணம் அறிவு என்பனவற்றால் மக்களெய்தும் பெருமைக்கும் மற்றைச்சிறுமைக்கும் உரைகல்லாவது தாம் தாம் செய்யும் கருமமே பிறிதில்லை. (எ-று.)

இத்திருக்குறளை,

இனைய தாகலி னெக்குலத் தியாவர்க்கும்
வினையி னல்வரும் மேன்மையும் தாழ்மையும்
அனைய தன்மை யறிந்து மழித்தனை
மனையின் மாட்சியென் றான்மனு நீதியான்

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

32 அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்

(இ-ள்) மாறுபடுதலையுடைய அரசரைச் சேர்ந்தொழுகுபவர் அவரை மிக நீங்குவதும் மிக நெருங்குவதும் செய்யாது தீக்காய்வார் போல இடை நிலத்திலே நிற்க. (எ-று.)

இத்திருக்குறத் கருத்தை,

அரசியற் பாரம் பூரித் தயர்ந்தனை யிகழா தையன்
மரைமலர்ப் பாத நீங்கா வாழுதி மன்ன ராவார்
எரியனற் குரிய ரென்றே யெண்ணுதி யெண்ணம் யாவும்
புரிதிசிற் றடிமை குற்றம் பொறுப்பரென் றெண்ண வேண்டாம்

என்ற செய்யுளில் அமைத்திருத்தல் காண்க.

33 உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்ன ருடைத்து

(இ-ள்) உருளாநின்ற பெரிய தேர்க்கு அச்சின்கண் ஆணி போல வினைக்கண் திண்ணியாரை உடைத்து உலகம் அதனால் அவரை வடிவின் சிறுமை நோக்கி இகழ்தலை ஒழிக. (எ-று.)

இத்திருக்குறட் பொருளை,

சிறியரென் றிகழ்ந்து நொய்வு செய்வன செய்யன் மற்றிந்
நெறியிகழ்ந் தியானேர் தீமை யிழைத்தலா னுணர்ச்சிநீண்டு
குறியதா மேனியாய கூனியாற் குலவுத் தோளாய்
வெறியன வெய்தி நொய்தின் வெந்துயர்க் கடலி லாழ்ந்தேன்

என்ற செய்யுளில் அமைத்திருத்தல் காண்க.

34 எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

(இ-ள்) பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும் பாவத்தி னீங்கும் வாயிலுண்டாம்; ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்த மகனுக்கதுஇல்லை. (எ-று.)

இத்திருக்குறளை,

சிதைவகல் காதற்றாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவியந் தணரை யாவைப் பாலரைப் பாவை மாரை
வதைபுரி குனர்க்கு முண்டா மாற்றலா மாற்றல் மாயா
வுதவி கொன்றார்க் கொன்றேனு மொழிக்கலா முபாய

என்ற செய்யுளில் அமைத்திருத்தல் காண்க. [முண்டோ

(தொடரும்.)

ஒளியலைகள்

திரு. A. ஸ்ரீநிவாஸாசாரியாரவர்கள் B.A., L.T.,
ஆசிரியர், ஸ்ரீவில்லிபுத்தூர்.

கண்ணகன்ற ஞாலமுழுதும் பொருளுள்ள விடத்தும் பொருளில்லாத விடத்தும் எங்கணும் இடைவெளியின்றித் தொடர்ந்து பரவும் வான்பொருள் ஒன்றின்கண் எழும் அலையியக்கமே ஒளியெனப்படும் என்பதை முன்னர்க் குறித்தேம். அவ்வலைகள் எழுமாற்றையும் இயங்குமாற்றையும் சற்று நுணுகியாராய்வாம்.

உலகிலுள்ள பொருள்களைத் திண்பொருள்கள் நெகிழ்பொருள்கள் ஆவிப்பொருள்கள் என மூவகையாகப் பிரித்தல் தொன்று தொட்டுவரும் மரபு. அவைகளில் திண்பொருள் ஒவ்வொன்றும் தனக்கெனத்தனிவடிவும் பருமனும் அமைந்ததாகும். ஆயினும், அவைகளிற் சில ஈரக் களிமண்போல்வன புறத்தே நின்றுதாக்கும் ஒருவலிக்கு உட்படுங்கால் எதிர்ப்பின்றி அடங்கி உருவேறுபட்டு அது நீங்கிய பின்னரும் திரிந்த வடிவுகளோடே அமருந்தகையனவாம். ஆனால் பிரம்புபோன்ற திண்பொருள்களோ புறவலியொன்று தம்மைத் தாக்குங்கால் அதனை இயன்றவாறு எதிர்க்கும் இயல்பினவாயும் இயலாமைபற்றி அடங்கித் தாழ நேர்ந்துழி ஒருவாறு உருவந்திரியினும் அது நீங்குங்கால் அக்கணமே சலிப்பொழிந்து பண்டைய வடிவங்களை மீண்டும் அடைய முயலும் தன்மையனவாயும் அமைந்துள்ளன. புறவலிமைக்குத் தாழாது மீறியெழுந்து அது ஒழிந்ததும் முன்னிலைக்கு மீள முயலும் பொருள்களை இனி 'மீறியெழும் பொருள்கள்' என்போம். அப்பொருள்களின் உள்ளகத்துறையும் இவ் இயல்பிற்கு 'மீறியெழுகை' யெனப் பெயரிடுவோம். மீறியெழும் பொருள்களே தம்பால் ஓரிடத்துத் தோன்றும் அசைவுகளை எம்மருங்கும் பரவச் செய்யும் திறனுடையனவாம். இன்னிசை யாழின்கண் உள்ள நனிமுறுக்கிய நரம்பொன்றினை

ஒருபால் மீட்டுங்கால் அவ்விடத்துத் தோன்றும் ஆட்டம் அந்நரம்பு முழுதும் அலைவடிவாகப் பரந்து செல்லுதல் அந்நரம்பின் மீறியெழுகைமையைப் பற்றியதே. எண்ணிறந்த மெல்லிய நரம்புகள் ஒரு புள்ளியினின்றும் எம்மருங்கும் இழுத்துக் கட்டப்பட்டுள்ள ஓரிடம் உண்டாயின் அவ்வொரு புள்ளி ஆடுங்கால் அதன் ஆட்டங்கள் அலைவடிவாகப் பல நரம்புகள் வழியாகவும் பரந்து செல்லுமன்றோ? அன்றியும் அந்நரம்புகள் அனைத்தும் எவ்வகையானும் ஒரு படித்தாயிருக்கின் அலைகள் எந்நரம்பின் கண்ணும் ஒரே வேகத்தோடு பரவுமன்றோ? அலைகள் அங்ஙனம் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து இயங்குங்கால் யாதேனும் ஓர் அலையின் மேடு ஒரு கணத்து நிற்கும் இடம், ஆடும் புள்ளியினை மையமாகக்கொண்டு வரையும் ஒரு வட்டக் கோடாகும். இங்ஙனமே வான்பொருளிலும். வான்பொருளை ஒரு மீறியெழும் பொருளாகக் கொள்ளின் அதன்கண் ஓரிடத்துத் தோன்றும் அலைகள் வட்ட வடிவாகக் கீழும் மேலும் நான்கு பக்கங்களிலும் பரவுதல் வேண்டுமாதலின், அப்பெற்றித்தாம் அலைகளே ஒளியலைகள் என இயற்கைப் பொருணூல் வல்லார் முதற்கண் கொண்டனர். ஆனால் மாக்ஸ்வெல் என்பார் 1873-ம் ஆண்டு தமது மின்காந்தக் கொள்கையினை நிலை நாட்டத் தொடங்கியவன்று தொட்டு, ஒளியலைகளை மின்காந்த அலைகளென்றே அனைவரும் ஒருமிக்கக் கருதலாயினர்.

மின்காந்த அலைகளின் தன்மை, மீறியெழும் பொருள்களிற் றோன்றும் அலைகளைப்போல் எளிதில் உணர்தற் பாற்றன்று; என்னெனின், ஒருபொருளின் நுண்ணிய பகுதிகளின் புடைபெயர்ச்சியால் எழுவதொன்றன்று. அப்பொருளின் நிலையே மாறிமாறித் திரிந்து கொண்டிருத்தலின், அத்திரிபுகளின் தொடர்பு காரணமாகக் கிளம்புவன இம்மின்சார அலைகள். இதனை அறிதற்கு மின்சாரவலி காந்தவலி யிரண்டின் இயல்புகளையும் முன்னுணர வேண்டுதலின், அவைகளைச் சுருங்கக் கூறுவாம்.

செவ்வரக்குக் கழியொன்றைக் கம்பளியாற் சிறிது பொழுது தேய்த்தபின் அக்கழியினருகே காகிதத் துண்டு

களையோ நெட்டித் துண்டுகளையோ கொணருங்கால், அவ்வரக்கு அப்பொருள்களைத் தன்பால் இழுக்குந் தன்மையை எய்துகின்றது. இங்ஙனமே கண்ணாடிக் கழியைப் பட்டுடையொன்றால் தேய்க்கும்போதும் அக்கண்ணாடியும் நொய்யபொருள்களை இழுக்கும் (புதிய) இயல்பை யடைகின்றது. ஆயினும் கம்பளியோடு உரசப்பெறும் ஓர் அரக்குக் கழி அஃதனைய பிறிதொரு அரக்குக் கழியினைக் கவரமாட்டாது விலக்குகின்றது; அங்ஙனமே பட்டோடு உரசப்பெறும் கண்ணாடியும் அஃதனைய பிறிதொரு கண்ணாடியை அணுகுங்கால் அதனைத் துரத்துகின்றது. ஆனால் வெவ்வேறு பொருள்களானே உரசப்பெறும் அரக்கும் கண்ணாடியும் ஒன்றையொன்று அணுகுங்கால், ஒன்றுக்கொன்று கவர்ச்சியுடையதாகி இரண்டும் ஒன்றுசேர முயல்கின்றது. இவைகளைப் பழக்கத்தால் உணர்ந்த பண்டைய அறிஞர் நொய்யபொருள்களைக் கவரும் அவ்வாற்றலை மின்சார ஆற்றலெனவும், உரசப்பெறும் பொருள்களின் இருவகை வேறுபாடுகட்கிணங்க அது நேர்மின்சாரம் மாற்று மின்சாரமென இருவகைத்தாகும் எனவும் ஆராய்ச்சி முகத்தானே தேர்ந்து கண்டனர். கண்ணாடியும் பட்டும் உரசும்போது கண்ணாடியிற்றோன்றும் ஆற்றலை நேர் மின்சாரமென்றும், அரக்கும் கம்பளியும் உரசுங்கால் அரக்கின்கட்டோன்றும் மின்சார ஆற்றலை மாற்று மின்சாரமென்றும் அழைத்தல் மரபாயிற்று. நேர் மின்சாரம் ஊட்டிய இருபொருள்கள் அணுகுங்கால் ஒன்றை மற்றொன்று விலக்குதல்போன்றே, மாற்று மின்சாரம் ஊட்டப்பெறும் இருபொருள்களும் ஒழுகுகின்றன; ஆனால் நேரும் மாறும் ஒன்றையொன்று அணுகுங்காற் கவர்வதன்றி விலக்குவதின்று; முரண்பாடுடைய நேர்மின்சாரமும் மாற்றுமின்சாரமும் முறையே ஊட்டப்பெறும் இருபொருள்களின் கவர்ச்சிக்குரிய காரணத்தைக் கூற விழைந்த நுண்மதி நூலோர் அவ்விரு பொருள்களைச் சுற்றியும் அவைகட்கிடையிலும் எம்மருங்கும் சிறிது தொலைக்கு மின்சார ஆற்றற்களன் ஒன்று அமைவதாகவும், அவைகட் கிடையே நேர்மின்சாரமூட்டிய மிகச்சிறிய ஒரு பொருளை விடுங்கால், அது நேர்மின்சாரப் பொருளினால் விலக்கப்படுதலானும் மாற்று மின்சாரப் பொருளினால் இழுக்கப்படுத

லானும் நிலைபெயர்ந்து மாற்று மின்சாரப்பொருளை நோக்கி விரைதலின், அச்சிறுபொருள் செல்லும் ஆற்றின் வழியே மின்சார ஆற்றல் நிகழ்வதாகவும், இங்ஙனமே பற்பல இடங்களில் அச்சிறுபொருளை விடுங்கால் அது பலப்பல கோடுகளின் வழியாகச் செல்லுதலானே, முரணிய மின்சார வலிகளையூட்டப் பெறும் இருபொருள்கட்கிடையே மின்சார ஆற்றல் நேர் மின்சாரப் பொருளினின்று வெளிக்கிளம்பி மாற்று மின்சாரப் பொருளைச் சாரும் பற்பல ஆறுகளாகிய (நேர் கோடுகளும் வட்டக் கோடுகளும் ஆகிய) ஆற்றல் வரிகள் தோன்றுவதாகவும் கருதுவாராயினர். மாறுபட்ட மின்சார மூட்டப்பெற்ற இரு பொருள்களுக் கிடையிலுள்ள வான்பொருளின்கண் ஒருவகை மாறுதல் உண்டாவது பற்றியும், அப்பொருள் புறவலிக்கு மீறியெழுந் தன்மை வாய்ந்திருத்தல் பற்றியும், ஒரு மின்சார ஆற்றற்களனும் அவ்வாற்றல் உருப்பட்டுச் செயலை விளைத்தற்குரிய ஆறுகளாகிய பல ஆற்றல் வரிகளும், அப்பொருள்கள் ஒன்றையொன்று அணுகும்போது தோன்றுவதாகக் கொள்ளல் ஆராய்ச்சியாளர்க்கு இன்றியமையாததாயிற்று. இக்கொள்கைகள் மின்சாரவ்லியின் செயல்களை எளிதாக அறிவுறுத்தவும், கருதலளவையால் அவைகளை இன்னின்னவாமெனச் செயல்முறையால் தேருமுன்னரே உய்த்துணர்தற்கும் பெருந்துணைகளாதலின், அவைகள் இஞ்ஞான்றும் மாணவர்கட்குப் பெரும் பயனை அளித்தற்பாலனவாகின்றன.

நேர் மின்சார வலிபெற்ற ஒருகழியையும் மாற்று மின்சார வலிபெற்ற மற்றொரு கழியையும் கிழமேலாக ஒன்றற்கொன்று அணித்தாமாறு பொருக்கெனப் பிடிப்போமாயின், அக்கணமே இரண்டிற்கும் இடையே மின்சார ஆற்றற்களனும் ஆற்றல் வரிகள் பலவும் தாமாக வான்பொருளின்கண் அமைதல் வேண்டுமன்றோ? வடபால் நேர் மின்சாரக் கழியும் இருக்குமேல், ஆற்றல்வரிகள் நேர் மின்சாரக் கழியினின்றும் தொடங்கி மாற்று மின்சாரக் கழியினை நோக்கிப் புறப்படுமாதலின் தென்றிசை நோக்கியெழும். பொருக்கென அவ்விருகழிகளும் அணுகுங்கால் அவ் ஆற்றற்களனும் ஆற்றல் வரிகளும் அக்கணமே கழிகளைச்

சுற்றி எம்மருங்கும் பரவத் தொடங்கிச் சிறிதுபொழுது சென்ற பின்னரே நிலையாக அமரும். அவ்வண்ணம் நிலைக்கு முன்பே கழிகளை யாம் பொள்ளென இடம்மாறிப் பிடிப்போமாயின், தென்பாலுள்ள நேர் மின்சாரக் கழியினின்றும் வடதிசைநோக்கி ஆற்றற்களனும் ஆற்றல் வரிகளும் எழுந்து பரவு மன்றோ? மீண்டும் கழிகளை நிலைமாறிப் பிடிக்குங்கால், ஆற்றங்களனும் ஆற்றல் வரிகளும் பண்டுபோற் றென்றிசை நோக்கி யெழும். இவ்வாறே கழிகளிரண்டையும் மாறிமாறி வடக்கும் தெற்கு மாகவும் தெற்கும் வடக்குமாகவும் முறையே விரைவாக அசையச் செய்யின் ஒருகணம் ஆற்றல் வரிகள் தென் திசை நோக்கியும் மறுகணம் அவை வடதிசை நோக்கியும் கழிகளைச் சுற்றி எம்மருங்கும் கிளம்பி வெளியே வானிடமெங்கும் பரவும். ஆற்றல் வரிகளின் இயல்பான நிலையைக் குறிக்கும் கோடுகட்குக் குறுக்காக எழும் கோடுகள் வழியே ஆற்றல் வரிகள் வெளி முகமாக எம்மருங்கும்பரவும். இங்ஙனம் பரவுவதொன்றே மின் சார அலையெனப்படுவது. நீரின்கண்ணும் யாழ் நரம்பின் கண் ணும் எழும் அலைகளில் பொருட் பகுதிகள் புடை பெயர்ச்சி யெய்துவதுபோல் ஈண்டு வான்பொருட்கண் இடம்பெயர்தல் எத்துணையும் இல்; ஆயினும், அதன் நிலைமாற்றமே பரந்து செல்லுகின்றது. அதாவது, வான்பொருளின்கண் மாறிமாறி யெழும் ஆற்றல்வரிகளின் திசை மாற்றமொன்றே பரந்து செல் கின்றது. பொருளின் ஆட்டமாகாது அதன் நிலையின்கண் எழும் ஆட்டமே மின்சார அலையாவது.

இதுகாறும் கூறியவெல்லாம் காந்த அலைகட்கும் பொருந் தும். காந்தக்கழி அல்லது காந்த ஊசி பொவ்வொன்றிற்கும் வடமுனை தென்முனையென இரண்டு உளவாம். அக்கழியின் நடுவைக் கயிற்றாற் கட்டித் தொங்கவிடுங்கால், அக்கழி வடக்கும் தெற்குமாக நிலையாக அமரும்; அந்நிலையில் வடக்கை நாடும் முனை வடமுனை யெனவும் தெற்கை நாடும் முனை தென்முனை யெனவும் பெயர்பெறும். காந்தப் பொருள்களிரண்டின் ஒத்த இயல்பினவாய முனைகள் ஒன்றற்கொன்று பிணங்கி விலக முயலும்; ஒவ்வாத இயல்பின (வடமுனையும் தென்முனையும்)

ஒன்றோடொன்று இணங்கிப் பொருந்த முயலும். ஒன்றை யொன்று கவரும் காந்தப்பொருளின் வடமுனைக்கும் அதனருகு நிற்கும் பிறிதொரு காந்தப் பொருளின் தென் முனைக்கும் இடையே காந்த ஆற்றற்களனும் காந்த ஆற்றல் வரிகளும் தோன்றுகின்றன. காந்தத்தின் வடமுனையொன்றை ஓரிடத்து அக்களனிற் பிடிக்குங்கால் அது எத்திசையை நோக்கி எக் கோட்டின் வழியே நகர்ந்து செல்லுமோ, அத்திசையும் கோடுமே ஆற்றற்களனின் திசையும் ஆற்றல் வரியுமாகும். வடமுனை தென்முனைகள் இரண்டு விரைவில் மாறிமாறி இடம் பெயர்ந்து வருங்கால் காந்த ஆற்றல் வரித்திரள்கள் திசை மாறிமாறி ஒருவழியே நோக்கி ஏகுமாதலின், அப்போது காந்த அலை கிளம்புகின்றது. இவையனைத்தும் கற்பனை வாயிலாக மனக்கண் முன் காண்பார்க்கு உணர்தற்கெளியவாம்.

மின்சார அலைக்கும் காந்த அலைக்கும் உள்ள ஒற்றுமையின் காரணத்தை ஆராயுங்கால், அது இவ்விரண்டு ஆற்றல்களுக்கு முள்ள மிக நெருங்கிய ஒரு தொடர்பைப் பற்றியதாகத் தென் படுகின்றது. மின்சார ஆற்றற்களன் உண்டாகும் இடத்தெல் லாம் அதே கணத்துக் காந்த ஆற்றற்களனும் உண்டாகிறது என்னும் உண்மை செயல்முறையானே அறிஞர்களால் மறுக்க வொண்ணுதவாறு நிறுவப்பட்டுள்ளது. ஆதலின் மின்சார அலை எழுந்தோறும் காந்த அலை உடனெழுதல் தானே போதரும். அவ்விரண்டில் ஒன்று எழுங்கால் மற்றொன்றும் உடனெழு தலின், தொடர்புற்ற அவ் அலையியக்கத்தை மின் காந்த அலை யெனும் ஒரு பொதுப்பெயராற் குறித்தலே சாலவும் பொருத்த முறும்.

இம்மின் காந்த அலைகள் உலகின்கண் உள்ள ஒவ்வொரு பொருளினின்றும் எழுதற்கு ஏதுவுண்டென ஆதாரங்காட்டி யறைகின்றனர் ஆன்ற நுண்ணறிவுடையார்; யாங்ஙனமெனில் கூறுவாம். உலகப்பொருளில் யாதேனும் ஒன்றைப் பிரித்துப் பிரித்துப் பார்த்து அதன் இயல்பைத் துருவியாராய்ந்து அனைத் திற்கும் அடிப்பொருள் (முதற்பொருள்) யாதெனக் காணுமாறு உட்புகுந்து செல்லுங்கால், இற்றைஞான்று அறிவுக்கெட்டிய

வரை, ஒருபொருளில் எண்ணிறந்த சிற்றணுக்கள் அடங்கியுள்ளன என்பதும், அவ்வணு ஒவ்வொன்றிலும் நேர்மின்சாரந் தங்கும் அசையாத நடுப்பகுதியொன்றும் அதனை விரைந்து வட்டமிட்டுச் செல்லும் பலமாற்று மின்சாரம் மருவிய நுண்ணிய பகுதிகளும் அமைந்துள்ளன என்பதுமே புலப்பட்டுள்ளன. இப்பேருண்மையைப் புரையிலாமெய்க் காட்சியெய்திய புங்கவ முனிவரான நம் ஆன்றோர் "அண்டத்திலுள்ளது பிண்டத்தும் உளதாம்" எனச் சுருக்கித் தொகுத்துரைத்தார். ஒவ்வோர் அணுவும், ஊன்றி நோக்குங்கால், கோளங்கள் பல சுற்றிவரும் ஒரு பரிதியினையுடைய ஓர் அண்டமே மானும். பரிதியனைய நுண்பகுதியை நிலைக்கோண் எனவும், (அணுவுக்குள் அணுவாய மிகச்சிறிய பகுதியைக் 'கோண்' எனும்பெயரால் அழைப்போம்) கோள்களனைய நுண்பகுதிகளைச் சுழல் கோண்கள் எனவும் சாற்றுவோம். ஒவ்வோர் அணுவிலும் நிலைக்கோணைச் சுற்றிச் சுழல் கோண்கள் பல விரைந்து வட்டமிடுங்கால், நடுநின்ற நேர்கோணுக்கும் அதனைச் சுற்றும் பல மாறு கோண்களுக்கும் இடையிற் றோன்றும் ஆற்றல்களத்துத் திசைமாற்றம் மாறிமாறி அமைதலின், முற்கூறிய மின்காந்த அலைத்திரள் கிளம்பிக்கொண்டேயிருத்தல் வேண்டுமன்றோ? இத்தகைய மின்காந்த அலைகளே சூட்டிற்கும் ஒளிக்கும் வான் தந்திக்கும் கட்புலன் கதுவவொண்ணாக் கதிர்கட்கும் முதற்காரணமாவனவெனத் துறைபோகிய பொருணூல் வல்லார் துணிகின்றனர். அதனைப் பின்னர் முறைப்படி ஆராய்வாம்.

சிதம்பரம் கல்வெட்டுகள்

திரு. S. K. கோவிந்தசாமி பிள்ளையவர்கள், M. A.,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

சிதம்பரம் நடராசப்பிரான் திருக்கோயிலுள்ளும் புறமும் பழமையான பன்னூறு கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் சிலவே கல்வெட்டு இலாக்கா அதிகாரிளால் வெளியிடப்பட்டிருக்கின்றன. எஞ்சினஎண்ணிறகடங்கா. யான் படியெடுத்த சில கல்வெட்டுகளைக் கீழே எழுதுகிறேன். இயன்றவரையில் அவ்வப்போது சிறிது சிறிதாக ஏனைய கல்வெட்டுக்களையும் எடுத்து வெளியிடலாமென்ற அவாமிக்குடையேன். திருக்கூத்தன் திருவருள் புரிவானாக.

I. இக்கல்வெட்டு முதலாங் குலோத்துங்க சோழனை கலிங்கத்துப் பரணிகொண்ட ஜயதரனின் நாற்பத்து நாலாமாண்டிற்குப்பின் பொறிக்கப்பட்டது. இப்பொழுது நடராசர் கோயிலுள் இரண்டாம் பிராகாரம் வடக்குச் சுவற்றில் இது காணப்படினும், முன்பு மூலத்தானர் சந்நிதிக்கு முன் சுவற்றில் எழுதியிருந்ததாகவும், பின்னர் அதையே மேற்சொன்ன விடத்தில் எடுத்து எழுதப்பட்டதாகவும் அறியக்கிடக்கிறது. இவ் வடக்குத் திருமதிலுக்கு "விக்கிரம சோழன் திருமாளிகை" யெனவும், "குலோத்துங்க சோழன் திருமாளிகை" யெனவும் கல்வெட்டில் பெயர் காணப்படுவதால் இது உலாக்கொண்ட விக்கிரம சோழனும் அவன்பின் போந்த இரண்டாம் குலோத்துங்கனும் ஆக்கப்பட்டிருக்கவேண்டும்.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ || திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலொத்துங்க 2. சொழ தெவர் திருத்தங்கையார் ராஜராஜன் குந்தவையாழ்வார் 3. ஆளுடையார்க்கு தண்ணீர் அமுது செய்தருள இட்ட மிண்டம் ஒ 4. ன்றினுல் குடிற்ற கல் நிறை மதுராந்தகன் மாடையொடு ஒக்கும் 5. பொன்முய ஐம்பதின் கழஞ்சு || நானிலத்தை முழுதாண்ட ஜய 6. தாற்கு நாற்பத்து நாலாண்டில், மின்றிகழ் நாயற்று வெள்ளி பெ 7. ற்ற

உரோகணி நாளிடபம் பொதால், தெணிலவு பொழிற்றில்லை நா 8. யகர் தங் கொயிலெல்லாம் செம்பொன் மெய்ந்தாளென வருந்தொழுதெ 9. த்தும் ராஜராஜன் குந்தவை பூவிந்தை யாளெ || தில்லை நாயகதெவற்கு 10. த்திருக் கண்ணடியும் இட்டார் || ஸ்ரீ ராஜெந்திர சொழதெவற்கு காம்பொச 11. ராஜன் காட்சியாகக் காட்டினகல்லு இது. உடையார்ராஜெந்திர சொழ 12. தெவர் திருவாய் மொழிந்தருளி உடையார் திருச் சிற்றம்பலமுடையார் கொ 13. யிலில் முன் வைத்தது || இந்தக் கல்லு திருவெதிரம்பலத்து திருக்கல் 14. சரத்தில் திருமுன் பத்திக்கு மெலைப்பத்தியிலெ வைத்தது. (இக்கல்வெட்டு ஹுல்ட்ஸ் துரைமகனால் ஆங்கிலத்தில் 'இந்திய சாசனங்கள்' (Epigraphia India) என்ற புத்தகத்தின் ஐந்தாம் தொகுதியில் வெளியாய் இருக்கிறது.)

II. இக் கல்வெட்டு மேற் கூறியதின் இடப் பக்கலில் உள்ளது. மூன்றாங் குலோத்துங்கன் (1178-1216) காலத்தது.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ || திருபுவனச் சக்கரவத்திகள் மதுரையும் ஈழமுங் கருவூரும் பாண்டியனை முடித்தலையுங் கொண்டு விராபிஷெகமும் விஜயாபிஷெகமும் பண்ணியருளின ஸ்ரீ திருபுவனவிர தெவற்கு யாண்டு முப்பத்தொன்பது நாள் இருநூற்றிருபத்து

2. நாலு, தொண்டைமானும் திருவைய்யாறுடையானும் மதுராந்தகப்ரம்மமாராயனும் ஆளுடையார் கொயிலுக்கு ஸாமுதாயத் திருமாளிகைக் கூறு தில்லை அம்பலப் பல்லவரையனும் ஸ்ரீ காரியஞ் செய்வார்களும், ஸாமுதாயஞ் செய்வார்களும் கொயில் நாயகஞ் செய்வார்களும் திருமாளிகைக் கூறுசெய்

3. வார்களும் செய்யத் திருவாய் மொழிந்தருளினபடி || ஆளுடையார்க்குச் செங்கழு நீர் திருப்பள்ளித்தாமம் சாத்துகைக்குச் செங்கழுநீர் ஆக்கவும் ஆக்குவார்க்கு இலக்கைக்கும் கொற்றுக்கும் உடலாகவும் நித்த விநொதவள நாட்டு ஆவூர்க் கூற்றத்துக் கிளியூருடையான் அரயன் ஸ்ரீபதஞ்சலிதெவனை இலங்-

4. கெஸ்வரன் ராஜாதி ராஜவளநாட்டு வெண்ணையூர் நாட்டுத்தன் காணியான நிலத்துப் பஞ்சவன்மாதெவியான குலொத்துங்க சொழச் சருப்பெதிமங்கலத்துப் பிடாகை சாத்த மங்கலமான சிவசரணசெகரநல்லூரிலெ அரையெநான் மாவரை முந்திரிகைக் கிழரை நிலமும் ஆயானக்குடியான ஆனந்தக்கூத்த நல்லூரில் நின்றும் வெ

5. று பிறிந்த சிவகாமசுந்தரி மங்கலத்திலெ அரையெ முக்காணி அரைக்காணி நிலமும் இந்நாட்டு வல்லத்திலெ கால் நிலமும் ஆகநெறரையெகாணி அரைக்காணி முந்திரிகைக் கிழரை நிலம் திருப்பூத்தொண்டர்களுக்கு நாயகஞ் செய்வார் களில் குவளைப்பாக கிழான் நின்றயங்கி ஆடுவானான தில்லை அழ

6. கப்பிச்சனும் திருச்சிற்றம்பல முடையானான ஆலால சுந்தரப் பிச்சனும் உள்ளிட்டார்க்கு இலங்கெஸ்வரன் குடுக்கை யாலெ இவர்கள் இன்னிலங்கைக் கொண்டு ஊர்மாவிந்த கடமை யும் இறுத்துக் குடிமையுஞ்செய்து இறை மிகுதி கொண்டு நாள் ஒன்றுக்கு இருநாறு செங்

7. கழுநீர்த் திருப்பள்ளித்தாமம் நித்தறப்படி ஆசத் திருப் பூமண்டபத்துக்கு முதலாக எண்ணக் கடவர்களாகத் திருப்பூ மண்டபத்துக்குக் கண்காணி செய்வார்களுக்குத் திட்டுக்குடுத் தார்களென்றும் இத்திட்டுப்படியெ விக்கிரமசொழன் திருமாளி கையிலெ தொண்டைமான் நிச்சயித்த இடத்திலெ கல்வெட்டவும் இத்திட்டுத் திருக்கை ஒ

8. ட்டியிலெ ஒடுக்கவும் கடவதாகப் பெறவெணுமென்று தான் நமக்குச் சொன்னமையில் இப்படிச் செய்யக் கடவதாகச் சொன்னொம் இப்படி செய்யப்பண்ணுவது எழுதினான் திரு மந்திர ஓலை நெறியுடைச்சொழ மூவெந்தவெளான் என்றும் இப்படி திருவாய் மொழிந்தருளினார் இவை தொண்டைமான் எழுத்து என்றும்,

9. இவை விழிஞத்தரையனெழுத்து என்றும் இவை சித்திராயனெழுத்து என்றும் இவை வயனாட்டரையனெழுத் தென்றும் இவை இரா [ரா] விழுப்பரையனெழுத்தென்றும்

இவை அங்கராயனெழுத்து என்றும் இப்படி ....ஸா....ஞ் செய் தருளி வந்த செய்யும்படியும் இட்டும் இன்னிலத்திற் ஸாதனங் களும் திருக்

10. கை ஒட்டிலெ ஒடுகித்து || இன்னமும் இவன் செய் வித்த ராஜாதி ராஜவள நாட்டுப் பொன்மெய்ந்த சொழபுரத்துப் பொன்மெய்ந்த பெருமாள் திரு நந்தவனத்துக்கு வடக்கும் செண்டு வெளிக்குத் தெற்கும் நடுவிடப் பட்டவிடத்திலெ ஆளுடையார்க்கு ஸ்ரீ பதஞ்சலிதெவன் என்னும் பெரால்

11. ஒரு திருநந்தவனஞ்செய்து இத்திருநந்தவனத்துக்கு நாலுபெர் ஆண்டு ஆள் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு அளக்கு மயிச்ச மொட்டு நாழி உரியும் ஆள் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு அளக்கும் இருவாச்சி முன்னாழியும் ஆள் இரண்டுக்கு நாள் ஒன்றுக்கு அளக்கும் மல்லிகையும் நந்தியாவத்தம் முக்குறுணி யும் ஆளுடையான்

12. பெர் இரண்டரையும் ஆளவந்தான் பெர் ஒன்றரையும் ஆக ஆள் நாலுக்கு நாள் ஒன்றுக்கு அளக்குந் திருப்பள்ளித் தாமம் முக்குறுணி நானாழி உரியும் நாள்தொறும் அளக்கவும். அளவாது சிகைப்பட்டதுண்டாகில் பொனவாகக் கொழுந்தும் பெருஞ் செண்பகமும் வெருந்தாழையும் உள்ளிட்டன

13. இட்டுச் செலவாக்காதெ அளக்க நிச்சயித்தவற் கதலெ திருப்பூ மண்டபத்துக்கு முதலாக அளந்து செலவாக்க கடவதாகவும். இவர்களுக்கு இலக்கைக்கும் சொற்றுக்கும் பெர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்குக் குறுணி நானாழி ஆக வந்த நெல்லு க்கு இன்னாட்டு இராசசூரியச் சருப்பெதி மங்கலத்துப் பிடாகை

14. தில்லை வாழந்தண நல்லூரில் விளை நிலத்திலெ ஐஞ்நூறுகுழிகொண்டது ஒருமாவாக ஐஞ்சுமாநிலமுங் கொல்லை. நிலத்திலெ அரைமா நிலமும் விலைகொண்ட இன்னிலத்து இறை மிகுதியால் உள்ள நெல்லுப் பெறக்கடவார்களாக. இனனிலம் இவர்களுக்கு விட்டானென்று மிப்படி

15. முப்பத்து நாலாவது நாள் ஐம்பத்திரண்டினால் ....ஸ....ஞ் செய்தருளி வந்த செய்யும்படிப்படி விக்கிரமசொழன்

திருமாளிகை இற் கல்வெட்டின இது ஜ்ணக்கையால் இப்படியும் கல் வெட்டிபது ௲:

III. இக்கல்வெட்டு மேற்கூறியக் கல்வெட்டுக்கு இடது பக்கம் உள்ளது, மூன்றும் இராசராசன் காலத்தது, இவன் மேற்கூறிய மூன்றும் குலோத்துங்கனின் மகன், இவன் காலம் கி. பி. 1216—1248.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ || திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜ ராஜதெவற்கு யாண்டு மூன்று நாள் நூற்று ஒரு பத்தைஞ்சு || தொ

2. ண்டைமானும் திருவையானுடையானும் மதுராந்தக பிரம்ம மாராயனும் ஆளுடையார் கொயிலுக்கு த்திருமா

3. ளிகைக் கூறு தில்லை அம்பலப் பல்லவராயனும் ஸ்ரீ கார்யம் செய்வார்களும் மஹாமுதாயஞ் செய்வார்களும் கொ

4. யில் நாயகம் செய்வார்களும் திருமாளிகைக் கூறுசெய் வார்களும் செய்யத்திருவாய் மொழிந்தருளினபடி || ஆளு

5. டையார்க்குத் திரு சாமக்காலெத்திலெ செங்கழு நீர்த் திருப்பள்ளித் தாமத்தாற் திருத்தொங்கல் செய்து சாத்த

6. ச் செங்கழு நீர் ஆக்கவும் ஆக்குவாற்கு சொற்றுக்கும் புடவை முதலுக்கும் நித்த விநோத வளநாட்டு ஆவூர்

7. க் கூற்றத்துக் கிளியூருடையான் அரயன் சோமனுதை தேவனை குநகுலத்தரயன் ராஜாதி ராஜ வளநாட்டு வெண்ணை

8. யூர் நாட்டு வல்லத்துத் தன் காணியான நிலத்து ராஜாதி ராஜன் கமுகு திரு நந்தவனத்துக்கு நீர் பாய்கிற மன்றெறு கூத்தன்

9. வாய்க்காலுக்குக்கிழக்கும் கிளியூருடையான் அரையன் தில்லை நாயகன் நிலத்துக்குத் தெற்கும் மெற்படியான நிலத் துக்குமெற்

10. கும் காரிமங்கல முடையா னுள்ளிட்டார் நிலத் துக்கும் வாய்க்காலுக்கும் வடக்கும் ஆக இவ்விசைந்த இன்னன் கெல்லை யிலும் நடு

11. வு பட்ட நிலத்து நீர் நிலையாய்த் திருச்செங்கழு நீர்ப் பயிர்ச் செய்ய நிலங்காலும் பயிர்ச் செய்வார்க்கு இலக்கைக்கும்

12. சொற்றுக்கும் நிலம் முக்காலும் ஆகவெலி நிலங் குடுத்தானென்றும் இந்நிலம் வெலியும் திருப்பூத் தொண்

13. டர்களுக்கு நாயகம் குவளைப்பாக்கிபூரன் நின்றயங்கி ஆடுவானுன தில்லை அழகப் பிச்சனும்

14. திருச்சிற்றம்பலமுடையானுன பொன்னம்பலப்பிச்ச னும் திருக்கழிப்பாலையான ஆலால சுந்தரப் பிச்சனும் பெரிய னுயனுன நர்லாயிரப் பிச்சனு

15. ம் திருநட்டப்பெருமானுன அம்பலக் கூத்துப் பிச்ச னும் வரியெனுஞ் செவகனுன எடுத்தருளிய சிபாதப் பிச்சனும் திருநட்டமாடி [க்குள்]

16. தெவர்கள் தேவப்பிச்சனும் பெரயனுயனுன் செய்ய பொற்பாதப் பிச்சனும் நாயகனுன கருமூலகாரணப்பிச்சனும் திருச்

17. சிற்றம்பல முடையானுன தில்லைனுயகப் பிச்சனும் உள்ளிட்டார் கைக்கொண்டு இந்நிலத்து ஊர்மரவிந்த கடமை இறுத்துக் குடிமையு

18. ஞ்செய்து இறை மிகுதி கொண்டு நாள் ஒன்றுக்கு நூற்று முப்பது திருச்செங்கழுநீர்த் திருப்பள்ளித்தாமம் நித் தற்படியாக எண்ணக் கட

19. வர்களாக ஸாதனம் பண்ணித்தந்தூர்கள். என்றும் இது திருக்கை ஒட்டியிலெ ஒடுக்கவும் இத்திருப்பள்ளித் தாமம் திருத்தொங்கலாகச் செய்து

20. திரு சாமக்காலத்தில் சாத்தவும் இப்படிக்குத் திரு மாளிகை இலெ கல்வெட்டவும் கடவதாகப் பெற வெணு மென்று தொண்டை

21. மான்தான் நமக்குச் சொன்னமையில் இப்படிச் செய் யக்கடவதாகச் சொன்னேம் இப்படிச் செய்யப் பண்ணுவது எழுதினன் திருமந்திர ஓலை

22. மீனவன் மூவேந்தவேளான் என்றும் இப்படித் திருவாய்மொழிந்தருளினர் இவை தொண்டைமானெழுத்தென்றும் இவை வயண

23. ட்டரயனெழுத் தென்றும் இவை சேதிகுலராயனெழுத் தென்றும் இவை சித்திராயனெழுத்தென்றும் இவை நந்தி பன்மனெழுத்தெ.

24. ன்றும் செய்தருளின செய்யும்படி— [எஞ்சிய சிறு பகுதி சிதைந்திருப்பதால் படியெடுப்பதற் கியலாமற் போயிற்று].

(தொடரும்.)

"சைவமுந் தமிழிலக்கியமும்" என்னுங் கட்டுரையின் ஐயவுரை.

திரு. G. சுப்பையா அவர்கள், அரசர்கல்லூரி, திருவையாறு.

தமிழ்ப்பொழில் துணர் எ. மலர் அ-ல் இக்கட்டுரை போந்துள்ளனதப் பொழில் பயில்வார் பலருமறிவார். இத் தலைப்பினையுடைய கட்டுரையின் பொருள்களை நான் ஊன்றிப் படித்தேன். இக்கட்டுரையினிடைச் சிலவையங்களும், சில முரண்பாடுகளும், காணப்பட்டன. அவைகளின், உண்மை காண்பான், ஈண்டு வரைய நேர்ந்தனன்.—"சைவமுந் தமிழிலக்கியமும்" என்ற முகப்பினைப் பார்த்தபோது தோன்றியதாவது, சைவமும் சைவத்தொடுபட்ட தமிழிலக்கியமுமேயென்பது (தமிழ்மொழியின்கண் ஆக்கப்பட்ட சைவவிலக்கியங்களைப் பற்றிப் பெரிதும் விரித்துரைப்பதாகும் என்பது). இது தோன்றிய பின்னர் இதனை யலர்த்திப் படித்தேன். பல சமயங்களொடுபட்ட சங்க விலக்கிய விலக்கண விரிவும் அவைகளிற் கூறப்படும் அகப்பொருள், புறப்பொருட் செய்தியும், அவைகளில் யாண்டோ கூறப்படும் சைவநூற் கருத்தும் பிறவும் புலனாயின.

" சைவமும் தமிழிலக்கியமும் " என்ற குறிப்பானே சைவமும் ஆரியமொழியிலக்கியமும், பிறவுஞ் சம்பந்தப்பட்ட மொழியிலக்கியமும் எனவும் பொருள் படுமாலோவெனின், பொருள் படும் என்க. அம்மட்டோ டமையாது, தலைப்பிற் கேற்பப் பொருளுங் காணப்படவில்லை. ஆகலின், இத்தலைப்பே யேற்புடைத்தாமோ எனத் தோன்றுகின்றது. இறுதியில் சில சைவ நூல்களின் வரலாறு குறிப்பிடப் பட்டுள்ளது. அதுகொண்டு சூட்டியிருத்தலாகாதாவெனின் பெருவரவினவற்றை யடக்கலே, தலைப்பினிலக்கணமாமன்றிப் பிறவாகாமையுங் காண்க.

" ஒருநாட்டினரின், பழக்க வழக்கங்களையும் பிறவற்றையும் புலப்படச் செய்வன இலக்கியங்கள் " என்பது கண்டுள்ளது. இலக்கணங்களாகாதா? இலக்கியமென்ற துணையானே இலக்கணமு மமையுமோ? என வையந்தோன்றுகின்றது. முற்காலத்திலக்கியங்களாலும், பிற்காலத்தார் உணர்தற் கிடனுண்டாகுமா? முற்காலத் திலக்கியப் போக்கும், பிற்காலத் திலக்கியப்போக்கும், அறிவிப்பன வெவையென வினவெழுமன்றோ? எனின்? எழுமென்க. இவைகட்குப்போத விடையிறுத்தல் இவ்வாக்கியக் குழுவி லகப் படாமையின், இவ்வாக்கியப் பகுதி கூறுவது அவ்வளவு பொருத்த முடைத்தாகக் காணப்படவில்லை.

" ஒரு காலத்திருந்த மக்களின்..........உள்ளம்.............. இலக்கிய வரலாறுணர்ந் தவர்கட்குத் தெள்ளிதிற் றெரியக் கூடியதாம்." என்ற தொடர்மொழிகளை நோக்குழி நாம் உணர்தல் எங்ஙனமென ஆரரும் நெறியுங் குறிக்கப் பட்டிலது. ஆகலின், குன்றக் கூறலாம் என்னும் குற்றத்திடைப் படுதலாகும்.

" ஒவ்வொரு காலத்தெழுந்த நூல்கள் பெரும்பாலும் ஒரே வகையான உட்கிடை யமைந்திருக்கின்றன " என்று கூறுவது சிறிதும் பொருந்தாக் கூற்றாம். சைவச் சமயச் சார்புடையன சைவ வுட்கிடை யுடைத்தாயிருக்கும். வைணவ சமயச் சார்புடையன வைணவ வுட்கிடை யுடைத்தா யிருக்கும். சைன

சமயச் சார்புடையன சைன மதவுட் கிடையுடைத்தாயிருக்கும். புத்த சமயச் சார்புடையன புத்தமதவுட் கிடையுடைத்தா யிருக்கும். மகம்மதிய மதச் சார்புடையன மகம்மதிய மதவுட் கிடை யுடைத்தா யிருக்கும். கிறித்துவ மதச்சார்புடையன கிறித்துவ மதவுட் கிடை யுடைத்தாயிருக்கும். பெரியபுராணம், தேவாரம் முதலியவும், பிரபந்தம், பாரதம், இராமாயணம் முதலியவும், சிந்தாமணி, சூளாமணி, திருநூற்றந்தாதி முதலியவும், மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலியவும், சீறாப்புராணம் முதலியவும், தேம்பாவணி முதலியவும், மேற் குறித்தனவற்றை விளக்கும். இந்நூல்களில் சைவ சம்பந்தமாயின வந்தனவெனக் கோடல், அமைவுடைத்தாமோ? எனின், அமைவுடைத் தாகா தெனவே தோன்றுகின்றது.

"சங்க காலத்தினும் அதற்கு முற்பட்ட காலத்தினும் இயன்ற சிறந்த இலக்கியங்களின் உட்கிடை பெரும்பாலும், அகப்பொருட்டிறமும், புறப்பொருட்டிறமுமேயாம்." இங்குக் கோடிட்டவற்றிலுள்ள சிறந்த இலக்கியங்கள் யாவை? பெயர் குறிக்கப்படவில்லையேயெனின், விடை காண முடியாதென்க. நூல்களிருந்தவாகத் தெரிந்தன்றோ பெயருங் குறிக்கப்படும். ஆகலின் முடியாதெனலே தேற்றம். ஊகித்தெழுதுதல் சால் புடைத் தன்றேயெனின்? உள்ளனகொண்டுகித்தலின் அமைவு ஒருதலையாக வாராதிருப்ப, இல்லனவற்றை யூகித் தமைவு கூறல் யார் கூற்றோ? அறிகிலன். உட்கிடை அகப்பொருள், புறப்பொருள் என்றும் அவற்றின் றிறம் என்றுங் கூறுகின்றது கட்டுரை. அகப்பொருள்பற்றிய விலக்கியமா? புறப்பொருள் பற்றிய விலக்கியமா? என ஆசங்கை நிகழுமன்றேயெனின்? நிகழும். அகத்தியம், பூதபுராணம், மாபுராணம், பெருநாரை, பெருங்குருகு, வாமனம், காக்கைபாடினியம் முதலாய முத்தமிழி லக்கணமும் சிலவும் பகர்கின்றன. இவைகளொடுபட்ட அவ்வக் காலத்திலக்கியமும், அவ்வச் சுவைகளையே பயக்குமன்றி, அகப் பொருள், புறப்பொருளை மட்டிலும் பயவாமையின், இக்கூற்று ஆராய்ச்சியில் கூற்றும் எனத் துணிதலே யேற்புடைத்தெனத் தோன்றுகின்றது.

"பண்டைய விலக்கியங்களில் அகப்பொருட் சுவையே மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தது" என்றதால், மக்களாவார் புறப்பொருளாகிய அறப்பொருளையும், பொருட்பொருளையும் வீட்டுப் பொருளையும் அறியாது, அவைகளில் உள்ளத்தைப் பதியாமலும், தனிப்பட்ட இன்பப் பொருளிலேயா மயங்கினர் எனத் தடையொன்று காணப்படுகின்றது. அகப்பொருளிலக்கணத்தில் "மக்களொடு மகிழ்ந்து மனையறங்காத்து, மிக்க காமத்து வேட்கை தீர்ந்துழித் தலைவனுந் தலைவியும் தம்பதி நீங்கித், தொலைவில் சுற்றமொடு துறவறங் காப்ப" எனச்சாற்றுதல் புறப்பொருளையன்றே. அகப்பொருளியலுணரலும், புறப்பொருளுணர்தற் பொருட்டன்றிப் பிறவற்றிற்கன்றே ஆகலின், இருவகைப்பொருளிலும், புறப்பொருளிலேயே உள்ளங் கவரப் பெற்றுப் பேரின்பந் துய்த்தோராவர். நம் நாட்டுத் தமிழ் மக்கள் எனக்கூறின் வருமிழுக் கொன்றுமின்றாம். அகப்பொருளிலும், புனைந்துரைக் கூற்றுக்களே மலிந்திருக்கின்றன. நாடகவழக் கொடுபட்டதும், உலகியற்றிற மிசைந்துள்ளதும் ஆகிய அகப்பொருட் சுவை கவர்ந்ததென்றல் கூடாதென்க. கவர்ந்ததாயின் மக்கள் சீர் கேடுற்றுத் திகழ்ந்தனராவர் எனத் தேறலே யொருதலையாய் முடியும்.

"கடைச் சங்க நாளில் ஒரு காலத்தே பொருளிலக்கணமறிந்த புலவர் கிடையாமற் பாண்டியன் புடைபடக் கவன்றபோது, என்னை? எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே? பொருளதிகாரம் பெறேமேயெனின், இவை பெற்றும் பெற்றிலேம்" என இறையனாரகப் பொருளுரையிற் கண்டனகொண்டு கூறல் பொருந்தாக் கூற்றாம். இடைச்சங்க நூலாகிய தொல்காப்பியமென்னும் பேரிய நூலொன்றிருத்தலின், அவ்வகப்பொருள் வந்த வரலாறுபற்றியுரைப்பது தவறாம் என்பது ஆராய்ச்சியாளர் துணிபாக வந்து நிலவுதலின் தேற்றமாகின்றது. "நாற்பொருட் பயக்கு நடைநெறித்தாகி" என|வியலுளதாகலானும், நச்சினார்க்கினியரும், பொருளதிகார முற்பகுதியில், பொருள், அறம் பொருள், இன்பம் வீடு என்பன என்றும், வீடென்பது சிந்தையுமொழி

யுஞ்செல்லா நிலைமைத்தென்றும் இலக்கணவகையாற் கூறப் படுவன மூன்றேன்றுஞ் சாற்றிலானும், பரிமேலழகரும், அது கொண்டு வழிமொழிதலானும், இலக்கணமுடையன மூன்றென்றும், அம்மூன்றற்கும் இலக்கியமில்வழி இலக்கணமின்றாய் முடியுமாகலின் மூன்றும்பற்றி யிலக்கியமும் உண்டென்றலே ஆராய்ச்சிக்கு ஒப்ப முடிந்ததாகும்.

" திருவள்ளுவர் காலத்திலிருந்துதான் முப்பால் பகுத்துக் கூறத் தொடங்கினரென்றும், பதினெண் கீழ்க் கணக்கதற்குச் சான்றென்றும்" கூறல் எட்டுணையும் பொருந்தாக் கூற்றாம். ஈண்டு மேற்கணக்கு நூல்கள் பகர்வன யாவையென வினவின் அதற்கு விடையு மிவ்வாக்கியத்தில் காணமுடியாது. "சம்பந்தர் முதலிய சமயாசிரியர்காலத்தின் பின்னர்த்தான் தலபுராணமும் பிறவும் தோன்றலாயின" வென்று கூறப்பட்டுள்ளது. பரி பாடலில் " பாயிரும் பனிக்கடல்" என்னும் செவ்வேள்பற்றிய பாடலில் புராணங் கூறிற்று என்றார் நச்சினார்க்கினியர்.

" பார்கொண்டு மூடிக் கடல்கொண்ட ஞான்றுநின் பாத
நாலஞ்சு புள்ளின மேந்தின வென்பர்" [மெல்லா

இத்திரு விருத்தங் கூறுவதக்காழிப் புராணமே.

ஆழ்வார்களோ, நாயன்மார்களோ, தலபுராணங்கருதியே அவைகளை யோரோ விடங்களில் விரித்துஞ் சுருக்கியுமே புகழ்ப் பாக்கள் பகர்ந்தருளினரன்றிப்பிறசெய்தி குறிக்கப்படாதாகும். மேற்கூறியவைகளால், சங்க விலக்கியங்களிலும், புகழ்ப்பாக் களிலும், புராணவரலாறு குறிக்கப்பட்டுளதால் இவைகட்கு முன்னர்ப் புராணங்களிருந்தன வென்பதற்குச் சான்று அவை களேகாட்டும். ஆகலின், இக்கூற்று முறைபிறழ்வானதே யாம்.

" ஆதியிற்றமிழ்நூல்........தெரிய வருகின்றது" ஒவ்வொரு சமய நூலாசிரியரும், அவ்வக்கடவுளே மொழிகளை வகுத்தன ரென்று கூறலின், இக்கூற்றெங்ஙனம் பொருந்தும்? "தொல் காப்பியத்திற் பல குறிப்பாகச் சைவநூற் கருத்துக்கள் அமைந் துள்ளவை அறிஞர்க்குப் புலனாகும்" என்றுரைக்கப்பட்டது. தொல்காப்பியர் சமயமே குறிக்கப் படாதிருக்கையில் சமயக்

குறிப்புண்டென்றல் விந்தையே யாம். "வினையினீங்கிய விளங்கிய வறிவின், முனைவன்" என்பது சைவநூற் சார் பென்றலெங்ஙனம் பொருந்தும்? இக்கருத்துத்தானே சைனர்க்கு முடன்பாடாகும். "மாயோன் மேய காடுறையுலகமும்" என வெளிப்படையாகக் கூறலான், வைணவ சமயத்தைக் குறித்த தென்றல் மிகச் சார்புடைத்தாகக் காணப்படாதோ? "அறிஞர்க்குப் புலனும்" என்றதனுல், நம்மனோர்க்குப் புலனுகாவோ? புலனுமாறெங்ஙனமோ? அறிவித்திடல்வேண்டும்.

பரிபாடலிலும், புறநானூற்றிலும், திருக்குறளிலும் திருமாலைப்பற்றிச் சிறப்பிக்கப் படுகின்றனவே பரத்துவமாக அவைகளைக் கொண்டு வைணவ நூற்சார்புடையனவெனக் கோடலாம் போலும். புத்த நூல்களிலும், சைன நூல்களினும் கூறப்படுதல் கொண்டு கூறல் ஆராய்ச்சி யாளர்க்கு ஒப்ப முடிந்ததன்றாகுமன்றோ? சம்பந்தர் காலமுதலியன கி. பி. 7-ஆம் நூற்றாண்டென்று கல் வெட்டுக்காரர் கூறுகின்றனரே. பௌத்த சமண..........தழைத் தோங்கச் செய்தனர். இங்கே முன்னே பின்னே கூறுதல் ஆராய்வின்றி வரைவதாகும்." வைணவ தலப்புராணங்களும் சைவத்தை விளக்கத் தோன்றினவோ? "பெரிய புராணம் சைவத்துக்கண்ணும், தமிழுக்குயிர் என்றல் எங்ஙனம் பொருந்துமோ? தனக்குப் பற்றிருந்தால் எதனையும் உயர்த்திக் கூறலொண்ணுமோ? தமிழிற் பல சமய நூல்களு மன்னவாகத் தானேயாகும். ஆகலின், இங்ஙனம் முடிவுறச் செய்தலியாங்ஙன முடியுமோ? "சிறுகாப்பியங்கள் (பிரபந்தங்கள்)" சிறுகாப்பியங்களுக்குப் பிரபந்தங்களென்ற பெயருண்டா? பிரபந்தம் என்னும், வடமொழிப் பெயருக்கு ஒருவர் வரலாற்றைக் கூறுவது அல்லது நூல் என்று தானே பொருள். சிறுகாப்பியத்தை மட்டும் உணர்த்துமென்றல் யாங்ஙனம்? பிள்ளைப் பெருமாளையங்கார் நூல்கள் தமிழில் சாலச் சிறந்தனவன்றோ?

"இந்நாள் வரையும்...............தக்க துணிபேயாம்." இக் கூற்றுச் சிறிதும் பொருந்தாது. "தமிழும்...........இன்றியமையாதனவா யிருக்கின்றது." இதுவும் மேற்கூறியாங்கேயாம்.

கல்வி நிலை

திரு. இ. கோவிந்தசாமி பிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
நாட்டுமொழிக் கல்லூரி, திருவையாறு.

இங்ஙனங் கல்வியைக் கற்றலால் ஒருவன் உயர்தற்கு வழியுண்டோ எனின் உண்டு.

"மெய்த்ததிரு வள்ளுவனார் வென்றுயர்ந்தார் கல்விநலந்
துய்த்தசங்கத் தார்தாழ்ந்தார் சோமேசா—உய்த்தறியின்
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு" எனவும்

"களர்நிலத்துப் பிறந்தவுப்பினைச் சான்றோர்-விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்-கடைநிலத் தோராயினுங் கற்றறிந்தோரைத், தலைநிலத்து வைக்கப்படும் எனவும் வருஞ்செய்யுளையுற்று நோக்கின் உண்டென்பதுவே பெறப்படுகின்றது.

இங்ஙன முயர்நெறி கூட்டுங்கல்வியை இளமையிலும் முதுமையிலுங்கற்பது எத்துணைவன்மையும் மென்மையு முடைத்தெனிற் கூறுதும். "இளமையிற் கல்" என ஔவைபிராட்டியாரும், "இளமையிற் கல்வி சிலையிலெழுத்து என ஆன்றோரும் கூறுவனகொண்டு இத்துணையின் இளம்பருவமானது, குடும்ப நிலையினைப்பற்றாமல் அடக்கம் முதலிய நற்குணம் வாய்க்கப்பெறுங் காலமாகும். 'தொட்டிற் பழக்கஞ் சுடுகாடு மட்டே' எனக் கூறுவதுகொண்டு, இளமையில் வருங் கல்விப் பழக்கமே சிறந்ததென்பதுங் கொள்ளக்கூடும். இவ்விளமைப் பருவமானது பாடங்களைச் சிந்திக்கவும், ஆசிரியர்மாட்டு நாணமின்றிப் பணி செய்யவும், கற்றூல் பசுமரத்தாணிபோற் கல்விபதியவும், மனம் ஒருப்பட்டு நிற்கவும், ஆசிரியர் சொன்னவாறொழுகவும் பெறுங் காலமேயாம்.

முதுமைப் பருவத்திலோவெனிற் கல்வியானது மனதிற் பதியமாட்டாது. காம முதலியவைகளில் ஈடுபட்டு மனவொருப்

பாடின்றி யலேந்து குடும்ப நிலேயினைப்பற்றி வருந்தும். ஆகலான், முதுமையிற் கல்வி பயன்படமாட்டாது. "யாதானு நாடாமா லூராமா லென்னொருவன், சாந்துணையுங் கல்லாதவாறு" என வள்ளுவர் வற்புறுத்தவும் இங்ஙனங்கூறல் அமையுமோவெனின் அமையும். வள்ளுவர் கருத்துமதுவே யாம்.

இளமை தொடங்கியே கற்றுவரல் வேண்டுமென்பதுதான் அதன் பொருளாகக் காணப்படும் உய்த்துணரின்; முதுமையிற் கற்கத்தொடங்கலாகாதென்பதும் புலப்படும். 'கல்லாதுபோகிய நாளும்' என்னும் நாலடியும் இதனை வற்புறுத்தும்.

"காலையிலே பல்கலைநூல் கல்லாத் தலைமகனும்
ஆலையெரி போன்ற வயலானும்—சால
மனக்கட் டழிக்கு மனையாளிம் மூவர்
தனக்கட் டமத்துச் சனி" என்னும் பழம் பாடலையு

நோக்கித் துணிதல் கடனாகும்.

இங்ஙனமிளமையிற் கல்வி கற்றற்கு ஆசிரியன் வேண்டு மாலேவெனின் வேண்டும். ஆசிரியனைச் சார்ந்தன்றிக் கல்வி யொருவன் கற்கமுடியாது. அன்றாற்குக் கல்வியு நிரம்பாது. 'தொட்டுக் காட்டாத வேலை சுட்டுப் போட்டாலும் வாராது' என்பது பழமொழியன்றோ.

ஆசிரியன் எனும் மொழிக்குத் (ஆசு—இரியன்) தன் மாட்டுற்ற மாணுக்கனது அறியாமையெனுங் குற்றத்தையறவே யோடுமாறு செய்தறிவுச்சுடர் கொளுத்துபவன் என்பது பொருளாம். இப்பெற்றிவாய்ந்த வாசிரியன்மாட்டுக் காலத்தொடு சென்று சீலத்தொடு பயின்று கல்வி கற்றுவரலே சால்புடைத் தாம்.

ஆசாரியன், உபாத்தியாயன், கணக்காயன், ஓசன், தேசிகன், குரு முதலிய சொற்களின் பொருளும் மீண்டுணரத் தக்கதாம்.

ஆசிரியனுக்குக் கூறப்படும் இயல்கள் பலவுள, அவற்றுள் சிலவருமாறு,

"வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்
வான்யா றன்ன தூய்மை வான்யாறு

நிலம்படர்ந் தன்ன நலம்பட ரொழுக்கமும்
திங்களன்ன கல்வியும், திங்களொடு
ஞாயி றன்ன வாய்மையும் யாவதும்
அஃகா வன்பும் வெஃகா உள்ளமும்
தலைநா வன்ன சமநிலை யுளப்பட
வெண்வகை யுறுப்பின ராகித் திண்ணிதின்
வேளாண் வாழ்க்கையுந் தாஅ ளாண்மையும்
உலகிய லறிதலும் நிலைஇய தோற்றமும்
பொறையு நிறையும் பொச்சாப் பின்மையும்
இன்னோ ரன்ன தொன்னெறி மரபினர்
பன்னருஞ் சிறப்பி னல்லா சிரியர்'' என்பதாம்,

இத்துணைப் பெருமை யமைந்த வாசிரியன் மாட்டே நன்மாணாக்கரா நிலையினின்றே யறத்திற்றிரியாப்படர்ச்சித் திறத்தொடு புரிந்து கல்வி கற்றல்வேண்டும்.

மாணாக்கன் இயல்பெங்ஙனமிருக்க வேண்டுமென்பதுமொரு சிறிது ஆராய்வாம். மாணாக்கன் என்னுஞ் சொல்லை (மாண் + நாக்கன்), (மாண் + ஆக்கன்) (மாள் + நாக்கன்), எனப் பகுத்து (அறம் பொருள் இன்பம் வீடெனும்) மாட்சிமைப்பட்ட பொருளையே கூறும் நாவையுடையவன் எனவும், அவைகளைத் தனக்கும், ஆசிரியனுக்கும் ஆக்குபவன் எனவும், அறியாமையை மாள்விக்கும் நாவையுடையவன் எனவும் பொருள்கோடல் தகுதியெனல் தோன்றுகின்றது.

மாணவன், கற்போன், கேட்போன், சீடன் முதலிய பெயர்களும் மாணாக்கருக்கு வழங்கப்பெறும். எங்ஙனமாவது மாணாக்கன், மாணவநிலை (பிரமசரிய வொழுக்குடை நிலை) யினின்றே கற்றல்வேண்டும். இன்றேல், ஆசிரியருளமகிழ்வெய்த நடக்கமுடியாது. காலத்திற் செல்லவுங் கூடாது, கல்வி நிரம்பவும் நிரம்பாது. ஆசிரியர் மனமகிழ்வெய்த நூல்கள் கற்றலே யேற்புடைத்தாம். "நெஞ்சுற வருங்கலைகள் கற்குமவர் தம்மளவி னேயமுறுதவர்கள் யார்" என்பது பராதமன்றோ! நெஞ்சொடொன்றவே கற்றல்வேண்டும். "ஆசானுரைத்தமை அமைவரக் கொளினும்—காற் கூறல்லது பற்றல

ளுகும். அவ்வினை யாளரொடு பயில்வகை யொருபால்
செவ்விதி னுரைப்ப வவ்விரு பாலும்
மையறு புலமை மாண்பு நனியுடைத்தே" என்னும்
நன்னூற் சூத்திரங்களுமிங் கறியத்தக்கன.

ஆகவே நல்லாசிரியர் மாட்டு நன்மாணுக்கனாய் நின்று கற்றல்வேண்டும் என்பதும் அங்ஙனம் கற்றலன்றிக் கல்வி நிரம்பாது எனவும் இதுகாறுங் கூறியவாற்றான் பெறப்படும்.

இக்கல்வி மக்கட் பிறப்புற்றவர்க்கேயன்றிப் பிறவுயிர்கட் ஆகா, முப்பத்திரண்ட வயங்களோடுபொருந்திய பிறப்பு மக்கட் பிறப்பேயாயிருத்தலின், இவ்வவயவங்களையுடைய மக்கட் பிறப்பேபேசுதற்கும் நாற்பொருளடைதற்குமுரித்தாம் என்பது ஆன்றோருடைய அறவுரையாகும். மேலுமிங்ஙன முரைக்கப் பட்டது. உலகத்திடைக் காணப்படும் உயிர்கள் ஐம்பூத வேறு பாட்டால் அறிவுவகையால் ஐந்து பகுப்புடையன. அவை ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறியுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர் என்பன. இவைகட் கேற்றமானவறிவு பகுத்தறிவு.. அதுவே "தக்கவின்ன தகாதன வின்னவென்-றொக்கவுன்னு" முணர்வு. இவ்வறிவு கருதியே "மக்கடாமே யாறறி வுயிரே" என்றார். "விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல், கற்றாரோடேனையவர், (கற்றார் மக்களனையர், ஏனையவர் விலங்கனையர்) என்பது குறள். இக்குறளிலும், கற்றார் எனக்கூறி ஏனையவர் என விளிக்கின்றார். கல்லார் எனப் பகுதியொடு படுத்துக் கூறுமைய் மிங்கறியத் தக்கது (கல் என்ற பகுதியொடுபடுத்து எதிர்மறையாக்கமையே யாம்).

மாண்பொருளாகிய நாற்பொருளடைதற்குரிய கருவி கல்வியேயாம்.

"எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகு-மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடுபெறும்," என்பது பழம் பாட்டு.

ஈண்டியனூற் கல்வியைக் கருவியென்றாரேனும் ஒன்றற்கொன்று காரணமாகுமென்பது முய்த்துணரத் தக்கதாம்.

இக்கல்வி, ஆரம்பக்கல்வி, நடுத்தரக்கல்வி, உயர்தரக்கல்வி, தொழிற்கல்வி, இயனூற்கல்வி; இலக்கியக்கல்வி, அறிவுநூற் கல்வி, நீதிநூற்கல்வி, அறக்கல்வி, பொருட்கல்வி, இன்பக்கல்வி அரசியற்கல்வி யெனப் பலதிறத்தவாகப் பகுப்படும்.

இங்ஙனம் பலதிறமாயவனைத்தும், இலக்கணக்கல்வி, இலக் கியக்கல்வி, சாத்திரக் கல்வியெனு முத்திறத்தினுளடங்கும். முன்னர்த் தமிழ்மொழியின் பழமையான காலம், இடைப்பட்ட காலம், தற்போதைய நிலையென மூவகையாகப் பகுத்தோம். பழமைக் காலமாகிய முதற்சங்கத்தும் இடைச்சங்கத்தும் கடைச்சங்கத்தும் வழங்கிய நூல்கள் எவைகள் எனச்சிறிதராய் வாம்.

அகத்தியமும் மாபுராணமும், பூதபுராணமும் இசைநுணுக் கமும், தொல்காப்பியமும், அவிநயமும், பன்னிரு படலமும் முதலிய இலக்கண நூல்களும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு முதலிய நூல்களும் பிறவுமாம். அக் காலத்தில் வடமொழியினின்று மொழிபெயர்ப்புத் தமிழிற்கு வந்ததில்லை. "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ, யெழுத் தொடு புணர்ந்த சொல்லாகும்மே" "மொழிபெயர்த் ததர்ப்பட யாத்தலோடனையமரபினவே" எனச் சொல்லதிகாரத்து மரபியலில் தொல்காப்பியர் சாற்றியுள்ளாரேயெனின், அது பற்றிய வாராய்ச்சி யியனூற் குறிப்பின் கண் வரையப்பட்டு உள்ளது. ஆண்டுக் காண்க.

சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியவுமக்காலத் தனவே யாம். இடைப்பட்ட காலத்திலேதான் வீரசோழியம், நன்னூல் தண்டியலங்காரம், புறப்பொருள் வெண்பா மாலை, அகப்பொருள் முதலிய இயனூல்களும், பெரிய புராணம், இராமாயணம், கந்த புராணம் முதலியவும், சைவத்திரு முறைகளும் வைணவ பிரபந் தங்களும், சித்தாந்த சாத்திர முதலிய நூல்களும், உரை நூல் களும் தோன்றலாயின. அதன் பின்னரே பிரயோக விவேகம், இலக்கணக் கொத்து, மாறனலங்காரம், இலக்கண விளக்கம் தொன்னூல் விளக்கம், முத்து வீரியம் முதலிய இலக்கண நூல் களும், சிறு பிரபந்தங்களும் தனிப்பட்ட மறுப்பு நூல்களும்

பல மொழிபெயர்ப்பு நூல்களும் மிகப் பலவாய் மலிந்தன. சிறு பிரபந்தங்களெல்லாம் பழமையான காலத்தனவல்ல, பிற்காலத்தனவேயாம். இயலுண்டு, நூல்களில்லை. வடமொழியிலுள்ள சொற்களைத் தற்பவ தற்சம மொழியாகவே தமிழ்மொழியிலெடுத்தாண்டவர், வீரசோழிய நூலாசிரியர் நேமிநாதனூலாசிரியர் நன்னூலார் முதலியவர்களும், அருணகிரியாரும், வில்லியும், புராணவாசிரியரும், சிறு பிரபந்தங்கள் செய்த புலவர்களுமே யாவர். சுமார் நூறுண்டுகட்கிப்பால் உரைநடை நூல்கள் (வசன நூல்களகத்தியம்) எழுதத் தொடங்கினர். தொடரிசைக்குறி, முற்றுப்புள்ளி, வினாவிசைக்குறி, உறுப்பிசைக்குறி, இருதலை நகக்குறி, இருதலைப் பகரக்குறி, உடுக்குறி, வியப்பு (ஆச்சரிய)க்குறி முதலியவற்றை ஆங்கில நூல்களினின்று முதலில் வசன நூல்களில் எடுத்து வரைந்தவர் ஆறுமுக நாவலரே யாவர். முற்காலத்தில் நெடுங்கணக்குக் கற்றபின்னர் இலக்கண விலக்கியங் கற்கப்பட்டு வந்தன. இக்காலத்து அஃது முற்றவு மாறுபாடாம்.

இனி யம்மூவகை நூல்கள் (இலக்கண இலக்கிய சாத்திர நூல்கள்) கற்றற்குரியகாலங்களும் இடங்களும் யாவையெனவுஞ் சிறிது குறிப்பிடல் வேண்டியிருக்கின்றது.

பொதுவிதி :—

“ அட்டமியி லோதிணு லாசானுக் காகாது
சிட்டருக்குப் பன்னுன்கு தீதாகும்—கெட்டவுலா,
வித்தைக்கு நாசமாம் வெய்ய பிரதமையிற்
பித்தரும் பேசார் பிழை” என்று

குறிக்கப்பட்ட காலங்களல்லாதனவாங் காலங்களே கற்றற்கேற்ற காலங்களாம்.

சிறப்பு விதி :—இலக்கணக் கல்வி கற்றற்குரியபொழுது முற்பகல் $3\frac{3}{4}$ நாழிகைக்குமேல் ($7\frac{1}{2}$ மணிக்குமேல்) ௰ நாழிகைக்குள் ஏற்பட்ட பொழுதாகும். இலக்கியக்கல்வி பிற்பகல் உ௰ நாழிகைககுமேல், (2 மணிக்குமேல்) 27 நாழிகைக்குள் ஏற்பட்ட பொழுதாகும்.

சாத்திரக் கல்வி:—இவ்விருவகைக் கல்வியும் முற்றிய பின்னரே படிக்கவேண்டிய தாம் சாத்திரக் கல்வியை முற்பகலிலும், அதனோடு தொடர்புடைய புராண முதலியவற்றைப் பிற்பகலிலுங் கற்றல்வேண்டும். இவைகளே எல்லார்க்குமொப்ப முடிந்தாகும். "ஓதற்பிரிவு ஒரு மூன்றியாண்டே" என்பது அகப்பொருள். "வேண்டிய கல்வி யாண்டு மூன்றிறவாது" என்பது தொல்காப்பியம். இவை கற்று நூற்றுறை போய்க் கடிமனைக் கிழவன் உயிர் நலத்தின்பொருட்டு அறிவு நூல்களைக் கற்பதற்குப் போதல்வேண்டியிருத்தலின் இலக்கண விலக்கிய வாற்றல் படைத்த பின்னர்ச் சாத்திரக் கல்வி கற்றல்வேண்டுமென வரையறுக்கப் பட்டதாகும்.

ஒருவன் கற்பதற்குரிய காலவரையறையினைச் சிறிதாராய்வாம். 5 ஆண்டு முதல் 10 ஆண்டுவரை, நெடுங்கணக்கும், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, வாக்குண்டாம், நன்னெறி முதலிய சிற்றிலக்கியங்களும், நிகண்டும், தோத்திர நூலும், சிறிதளவியனூற்பயிற்சியும் கற்றல்வேண்டும். 10 ஆண்டு தொடங்கி 16 ஆண்டுவரை, அந்தாதி, பிள்ளைத்தமிழ், கலம்பகம் உலா, சிலேடைவெண்பா, நைடதம், திருவிளையாடற் புராணம் முதலிய இலக்கியங்களும், ஐந்திலக்கண மூலபாடமும், நன்னூற் காண்டிகையுரை முதலிய இலக்கணவுரைகளும், குறள் மூலம் தொல்காப்பிய மூல முதலியவும் கற்றல்வேண்டும். 16 ஆண்டு தொடங்கி 24 ஆண்டுவரை தொல்காப்பியவுரை திருக்குறளுரை பத்துப்பாட்டு எட்டுத்தொகை ஐம்பெருங்காப்பியம் ஐஞ்சிறு காப்பிய முதலியவும், சேதுபுராணம், தணிகைப்புராணம், கந்த புராணம், இராமாயணம், பாரதம், பெரிய புராணம் முதலிய இதிகாச புராணங்களும், கற்றல்வேண்டும்.

இங்ஙனம் ஒருவன், கற்றுவல்ல ஒரே ஆசிரியன் மாட்டு ஐம்பதினுயிரஞ் செய்யுட்களாவது பாடங் கேட்டல்வேண்டும். அங்ஙனம் கேட்டலோடமையாவது மேலும் ஐம்பதினுயிரஞ் செய்யுட்களைத் தானே ஆராய்தல்வேண்டும். ஆகவே ஒரு இலக்கம் (100000) செய்யுட்களை யாய்ந்தறிந்த ஒருவன் தான்

கற்றுவல்ல பண்டிதனுவான் என்றறிஞர் கூறுவர். இது தான் பழம் புலவர்களிடங் கண்டது. இவர்களே உலக வழக்குச் செய்யுள் வழக்கிவைகளை நன்குணரும் பெரியோருமாவர்.

எக் கொள்கையினைச் சார்ந்தவ ளுயினுமவன் கொள்கை வேறுபாடின்றி தன் கொள்கையில் குறிக்கோள் வைத்துப் பிறர் தம்கொள்கை நூல்களையும் ஆய்தல்வேண்டும். இங்ஙனம் இருபானுன்காண்டுவரைக் கல்வி கற்று முடித்துப் பின்னர் கற்புடை நங்கையைக் கண்டு மணத்தில் வாழ்க்கைக்கணிரீ இச் சில திங்கள் (அல்லது சிலவாண்டுகள்) கழிப்பிய பின்றை முப்பதாண்டளவிற்குள் அறிவுடைக் குரவன் மாட்டடைந்து அறிவு நூல்களையும் கொள்கைக் கேற்ற திரு முறைகளையும் கேட்டறிந்து உண்மை யறிவு கைவரப்பெறல் வேண்டும்.

"முப்பதா மாண்டளவில் மூன்றற் றொருபொருளைத்
தப்பாமற் றன்னுட் பெருனுயின்—செப்புங்
கலையளவே நின்ற காரிகையார் தங்கண்
முலையளவே யாகு மூப்பு". என ஔவையா ருறைந்

திருப்பதையும் கடைப் பிடித்தொழுகல் கடனுகு மன்றே.

இக்காலத்திற்கல்விகற்ப திங்ஙனமன்றும், பெரிதுமாருகவே விருக்கின்றது. தற்காலத்திற் பல்கலைக் கழகத்தார் தரும் நன் மதிப்புச்சீட்டொன்றின்பொருட்டுக் கற்பவர்கள், தேர்விற்கென வரையறுக்கப்பட்ட பாடங்களைப் படிக்கின்றுர்கள். படிப்பவர் கட்காசிரியர்களோ பலராவர். அவைகளிற் பலவற்றைப் பொருளுணர்ந்தோ உணராமலோ படித்துத் தேர்ச்சியுற்று வருகின்றுர்கள். அவர்களையொருவர்வினவில், அவர்கள் எங்ஙனமோ வரைந்தோம், எப்படியோ தேர்ந்தோம், வேண்டுமானுல் இதோ இருக்கின்றது நன்மதிப்புத்தாள் எனத் தீடீரெனத் திட்டமாக இறையிறுக்கின்றனர்.

அக்கழகத்தார் தந்த நன்மதிப்புத்தாளிற்குத்தான் மதிப்பும் உயர்தரப்பள்ளி முதலியவிடங்களில் தொழிலும் உண்டெனின் நாம் இதையாய்த லொண்ணுமோவெனின், ஆய்தலுமாகாது வரைதலுமாகாது வாளாவிருத்தல் வன்மையின்பொருட்டாகும்.

எனத் தெளிதல்வேண்டும் என்க. நிற்க, இன்னுஞ் சிலர் ஆசிரியரை யடுத்துக் கற்பதுமில்லை; கற்றவர் கூறலைக்கேட்பதுமில்லை; கற்றூர் முன்னுரையாடாமலிருப்பதுமில்லை. தாமாகவே நூல்களைக் கற்றுணர்வதுமில்லை. கற்றபடி யொழுகுவதுமில்லை. இன்னூர், "பலசொல்லிக் காமுறுவர் மன்ற மாசற்ற, சிலசொல்லல் தேற்ருதவர்" எனவும், 'கேட்பினுங்கேளாத்தகையவே, கேள்வியாற் ரேட்கப்படாதசெவி' எனவும் "கல்லாதவருநனி நல்லர் கற்ருர்முன், சொல்லாதிருக்கப் பெறின்" எனவும் "கற்றதூஉமின்றிக் கணக்காயர் பாடத்தாற், பெற்றதாம் பேதையோர் சூத்திரம், மற்றதனை, நல்லாரிடைப்புக்கு நாணுது சொல்லித் தன், புல்லறிவு காட்டிவிடும்", எனவும்

"உறை கினியவிந்நீர் பிறிதுழியில் லென்னும்
கிணற்றகத்துத் தேரைபோ லாகார்—கணக்கினைப்
முற்றப்பகலு முனியா தினிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று" எனவும் வரும் செய்யுட்

களையுங் காண்கின்றிலர் கொல்லோ!

(தொடரும்.)

பின்னங்குடிச் சுப்பிரமணியசாத்திரியார்
தொல்காப்பியச் சொல்லதிகார வாராய்ச்சிக்

குறிப்புரை மறுப்பின் மறுப்பு

வித்துவான், P. S. வேதாசலய்யரவர்கள், சென்னை.

பிரம்மஸ்ரீ டாக்டர் சுப்பிர்மணியசாத்திரியார் தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பிற்குத் திருவாளர் சோமசுந்தரம் பிள்ளையவர்கள் வரையும் மறுப்பினைக் கண்ணுற்றேன். அதில், பெரும்பாலும் சாத்திரியார் வரையும் உரைநடையைப் பற்றிய கண்டனமே கூறுவர். அன்றியும் ஆரியம் படித்தார் தமிழறியார்

என்பர். பிள்ளையவர்கள் சாத்திரியார் தொல்காப்பியச் சொல்லதிகாரக்குறிப்பில் கூறியுள்ளவிடயங்கள் கற்போர்க்குப் பயன் அளிப்பனவா அல்லவா என்பதை ஆய்தல் சிறப்புடையதாம்.

உரைநடை காலத்துக்கேற்ற நடையானே வரைதல் பயனளிக்குமேயல்லாது பல திரிசொற்களைப் பெய்துவரைதல் சிறப்பின்று. மரபியலின் கண்ணே பேராசிரியரும் அவ்வக் காலத்துக்கேற்ற நடையானே வரைதல் வேண்டுமென்றனர். ஆதலின் உரைநடையைப்பற்றி ஆய்தல் பயனில் செயலாம்.

வடமொழி நூல் உணர்ச்சியுடையாரே தமிழின் உண்மைப் பொருளைத் தெள்ளிதின் விளக்குவர் என்ற கருத்தைச் சிவஞான முனிவர் தமது சூத்திர விருத்தியின்கண் "வடநூற் கடலை நிலைகண்டறிந்த சேனுவரையர் எழுத்ததிகாரத்திற் குரைசெய்தாராயின் இன்னோரன்ன பொருளனைத்துந் தோன்ற ஆசிரியர் கருத்துணர்ந்துரைப்பர். அவர் சொல்லதிகாரம் போலப் பெரும் பயன்படாமை கருதி எழுத்திற்குரை செய்யாதொழிந்தமையின், தமிழ் நூலொன்றே வல்லவுரையாசிரியரை யுள்ளிட்டோருரையை ஆசிரியர் கருத்தாகக் கொண்டு பின்னுள்ளோரும் மயங்குவராயினரென்பது" எனவும்,

"வடநூ லுணர்ந்தார்க் கன்றித் தமிழியல்பு விளங்காதென்பது முணர்ந்து கோடற்கன்றே பாயிரத்துள் 'ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்' என்றதூஉமென்க," எனவும் கூறி விளக்கினர்.

இனி, பிள்ளையவர்கள் உரைநடையைப்பற்றிக் கூறும் குற்றமும் பல இடங்களிலும் பொருந்துவது அன்று எனத் தாலீபுலாக நியாயமாகக் கூறுவல்.

மறுப்பு (1) பக்கம் 148—150.

ஈண்டு 'அனைவரது கருத்துக்களும்' என்பது ஆறும் வேற்றுமைத் தொடர்...................எனத் தொகையாகவேனும் எழுதுதல் நன்று.

விடை. விசாகப்பெருமாளையர் தமது நன்னூற்காண்டிகை யுரையின்கண் 'சிறுபான்மை அரனது தோழன் என உயர்திணை

ஒருமைப் பொருண்மைக்கும் 'நினதடியாரோடல்லால்' எனது கைகள் என் இஃறிணைப்பன்மைப் பொருண்மைக்கும் அது உருபு வரும்' எனக்கூறுவர்.

ஆறுமுகநாவலர் தமது நன்னூற் காண்டிகையுரையின்கண் "சிறு பான்மை அரனது தோழன் 'குன்றவர் தமது செம்மல்' என உயர்திணைப் பொருண்மைக்கும், நினதடியாரோடல்லால்" என உயர்திணைப் பன்மைப் பொருண்மைக்கும் 'எனதுகைகள் என அஃறிணைப் பன்மைப் பொருண்மைக்கும் அதுஉருபுவரும்' எனப் புகல்வர். வை. மு. சடகோப ராமானுசாசாரியார் தமது நன்னூற் காண்டிகை யுரையின்கண் 'சிறு பான்மை அதுஉருபு 'நினதடியார்' 'எனதுகைகள்' என வருமொழி பன்மையாய் இருக்கும்போதும் வரும்; பிற உருபுகள் மாறி வருதலும் உண்டு. எனக் கூறினர். எனவே அதுஉருபு அஃறிணை ஒருமைக்கே வரல்வேண்டும் என்ற நியதிஇல்லை என்பதுபெறும். இதனானே பிள்ளையவர்கள் கூற்றுப் பொருத்தமில்கூற்று என்பது வெள்ளிடை விலங்கலாயிற்று.

மறுப்பு (2) பக்கம் 150—151. 'சார்புபொருளை' என்பது ....நன்கு பயிலாமையை விளக்கினர் ஆயினர்.

இம்மறுப்பு ஏற்றமுடையதே. இதனைக்கண்டு கூறியதற்குக் களிப்படைகிறேன். ஆயினும் இதனானே சாத்திரியார் எழுத்தியலில் பயிற்சியிலராவர் என்பது கொள்ளத்தக்கதன்று.

மறுப்பு (5—6) பக்கம் 155—157. 'திருச்சிராப்பள்ளி காலேஜில்...............தமிழ் உரைநடை அன்று எனத் தெளிக'

விடை. 'முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா
வஞ்சரை யஞ்சப் படும்' எனுங் குறளிற்குப்

பரிமேலழகர் 'கண்டபொழுது முகத்தால் இனியவாகச் சிரித்து எப்பொழுதும் மனத்திலின்னாராய வஞ்சரை அஞ்சல்வேண்டும்' என உரை வகுத்தனர்.

சுவாமிநாத தேசிகரும் தமது இலக்கணக் கொத்தின்கண் மேற்கூறிய குறளையே காட்டி "அஞ்சல்படும்" எனப் பிரித்தனர். பிரயோக விவேக நூலாரும் இங்ஙனமே கூறினர். ஆதலின்

பிள்ளையவர்கள் மறுப்பு வலியற்றதாகின்றது. பிரயோக விவேக நூலார் மட்குதிரையாதல் யாண்டையது?

மறுப்பு (9) பக்கம் 157-164. 'தெய்வச்சிலையார் உரையை மகா மகோபாத்தியாய சாமிநாதய்யர் அவர்கள்........................ மறுக்கப்பட்டவாறு அறிக.

விடை. பிள்ளையவர்கள் தொல்காப்பியர் கூறியமுறையை வலியுறுத்துகின்றனர். அம்முறை மாறியதைப் பிள்ளையவர்களே புரட்டாசிப் பகுதியில் வெளியிட்டனர். இக்காலத்து உரை நடைகளிலும் பாக்களிலும் தொல்காப்பியார் கூறியமுறை மாறி வருகின்றன.

மறுப்பு (10) பக்கம் 165. 'இவ்வாராய்ச்சியில் கூறப்பட்டன...............என்பது உரைநடை.'

விடை. "அருளிலை இவட்கென வயலார்நிற் பழிக்குங்கால்" என்ற கலியடிக்கு "அருள் இவட்கு இல்லை என்று யான் கூ துடே அயலார் நின்னைப்பழிக்குமளவில்" என உரைவகுத்தனர். இவ்வுரை நடையும் ஆங்கில உரை நடையோ? இங்ஙனம் வருவது வேற்றுமை மயக்கமே யாம். (தொடரும்.)

பின்னங்குடிச் சுப்பிரமணியசாத்திரியார் தொல்காப்பியச் சொல்லதிகார வாராய்ச்சிக்

குறிப்புரையும் மறுப்பும்

திரு. ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்,
தமிழ்ப்புலவர், மன்னார்குடி.

மறுப்பு 35—36.

(சூ. 1. குறிப்புரை.)

என்மனார் என்னும் சொற்குப்புறநிலை முடிபாகிய எச்சப் பெயர் என்பதுபற்றி இளம்பூரணர் உரைக்குறிப்பைப் பிழைபட உணர்ந்து மேற்கண்டவாறு பொருந்தாவுரை கூறிய குறிப்

புரையாளர், அவ்வென்மனார் என்னும் சொல்லின் அகநிலை முடிபுபற்றி உரையாசிரியர் பலரும் உரைத்த ஒன்றையொன்று ஒவ்வாத குறிப்புக்களை அப்படியே எடுத்துக் காட்டி ஒழிந்தாரேயன்றி, அவற்றுள் பொருத்தமானது இது, பொருத்தமில்லாதது இதுவென்று துணிந்து தங்கொள்கையை நிலையிட்டாரிலர்.

(2). அல்லதூஉம் அவ்விளம்பூரணர் ஆண்டு 'என்மனார்' என்னும் சொற்கு முடிபாகக் காட்டிய 'ஆசிரியர்' என்னும் சொல்லால் அவர் யாரைச் சுட்டினாரோ அதனை விளக்கினாருமிலர். அவர் முன்னமே தமது முகவுரையுள் தொல்காப்பியனரால் 'என்ப' என்றூற்போலும் சொற்களால் குறிக்கப்பட்ட ஆசிரியர் அகத்தியனாரும் அவர் தம் மாணாக்கருமாவர் என்று கூறினமையால், அதனையே ஈண்டும் உய்த்துக்கொண்டுணர வைத்தார்போலும். அற்றேல் அது மிகவும் பிழைபாடு உடைத்தென்பது காட்டுதும்.

முதற்கண் 'என்மனார் ஆசிரியர்' என்பதுபற்றி நக்கீரனார் கருத்து யாதென ஆராய்வாம். அந்நக்கீரனார் அவ்விறையனார் அகப்பொருள் முதற் சூத்திரவுரையுளே கூறியது பின் வருமாறு:—

'அஃதேயெனின், இதனை முதனூலென்று புகுந்தமையால், என்மனார் என்று சொல்லற்பாற்று அன்று; அது வழிநூல் வாய்பாடு ஆகலான்' என்பது கடா, அதற்கு விடை:—பிற நூல் எல்லாம் ஆசிரியப் பகுதிப்படும்; இது அவையேபோல ஆசிரியப்பகுதிப் படுங்கொல்லோ எனின், படாது; கந்தருவ வழக்கம் போல்வது களவாதல் மூன்று காலத்துப் புலவர்க்கும் ஒப்ப முடிந்தமையான், அவ்வகை சொன்னான் என்பது. அஃதேயெனின் தன்னையொத்த புலவர் இல்லையன்றே, தான் தலைவன் ஆகலான், எனின், அஃதே கருத்து; அறிந்திலை; தன்னானே உரைக்கப்பட்டது எனினும் பிறவற்றையெல்லாம் திரியவும் திரியாமையும் கொண்டார்; இதனைத் திரியாமையே கொண்டார் எல்லாரும் என்றற்கு அவ்வாறு உரைக்கப்பட்டது. தன்

மதம் உணர்ந்தாரையும் புலவர் என்றான், அறிபொருளுக்கு ஏனோரும் புலவர் ஆகலின், என்பது.

இதனால் 'என்மனார் புலவர்' 'என்ப' என்றாற் போல்வன மூன்றுகாலத்துப் புலவர்க்கும் ஒப்ப முடிந்ததோர் பொருளைக் கூறுமிடத்து, வழிநூல் ஆசிரியரால் வழங்கப்படும் வாய்பாடு என்பதும், தொல்காப்பியம்போலும் வழிநூல் வழக்கில் வந்துழி பெரும்பாலும் அது முதனூல் ஆசிரியரைச் சுட்டும் என்பதும் இறையனார் அகப்பொருள்போலும் முதனூல் வழக்கில் வந்துழி அது வேறு முதனூல் ஆசிரியர் என்பாரையொழித்து அதனை உணர்ந்த புலவரைப் பொதுவாகச் சுட்டுமென்பதும் பெறப் படும்.

பேரா உரைவன்மைப் பேராசிரியரும், 'சிதைவெனப் படுபவை வசையற நாடின்' என்னும் மரபியற் சூத்திரவுரையுளே, 'பொருளில மொழிதல்' என்பதற்கு, 'நூல் நுதலிய பொருளன்றி 'என்மனார் புலவர்' என்றாற் போல்வன வழிநூல் வாய்பாட்டு மாத்திரையே பயனாகச் செய்வன' என்று உரை கூறினார்.

அப்பேராசிரியர் 'மேற்கிளந்தெடுத்த யாப்பினுட் பொருளொடு......................யாத்தனர் புலவர்' என்னும் சூத்திரவுரையுள், 'யாத்தனர் புலவர்' என்பதற்கு 'முதனூல் செய்த ஆசிரியரால் சொல்லப்பட்டன' என்று பொருள் கூறினார்.

'வண்ணகந்தானே' என்னும் செய்யுளியற் சூத்திரவுரையிலே, 'எல்லா ஆசிரியரும் செய்த வழிநூற்கு இது (தொல்காப்பியம்) முதனூல் ஆகலின், இவரோடு மாறுபடுதல் மரபன்றென மறுக்க' என்றார்."

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூல் ஆகும்,' என்னும் மரபியற் சூத்திரவுரையிலே, 'அகத்தியமே முற்காலத்து முதனூல் என்பதும் அதன் வழித்தாகிய தொல்காப்பியம் அதன் வழிநூல் என்பதும் பெற்றாம்.' என்று கூறினார்.

ஆகவே அவர்க்கும் நக்கீரனார் கூறியதே கருத்தாதல் தெளிந்து கொள்ளப்படும்.

இனி இளம்பூரணர்,

'அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்' என்னும் எழுத்ததிகாரச் சூத்திரவுரையுள், 'இசை நூலாசிரியரும் முதனூல் ஆசிரியர் தாமேயெனினும், 'மொழிப' என வேறொருவர் போலக் கூறியது அதுவும் வேறொரு நூலாகச் செய்யப்படும் நிலைமை நோக்கிப் போலும்' என்று கூறினர்.

இதனால் 'மொழிப' : என்மனார் புலவர்' என்புழி புலவர் என வேறொருவர் போலக் கூறப்படுவது வழிநூல் வழிபாடு என்பதும், புலவர் எனப் பலர்பாலாற் கூறினும் முதனூலாசிரியர் ஆகிய அகத்தியனாரைச் சுட்டுதலே தோல்காப்பியனார்க்குக் கருத்தாமென்பதும் இளம்பூரணர் கருத்தாதல் துணிந்துகொள்ளப்படும்.

இச்சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியர் கூறிய உரையிலே, மொழிப என்பதற்கு எழுவாயாக ஆசிரியர் என்பதை வருவித்தும், என்மனார் என்பதனைப் புலவர் என்பதனோடு முடித்தும் காட்டினர். அவர் இவ்விடத்து இவ்வேறுபாடு காட்டினும் தொல்காப்பியனார் பலவிடத்தும் ஆசிரியர் அகத்தியனாரைச் சுட்டினாரெனக் கூறியுள்ளார்.

இனிப் பவஞானம் அகற்றிய சிவஞான முனிவரும் முதற் சூத்திர விருத்தியுள்ளே, 'என்ப' என்பதற்கு எழுவாயாக 'நூலோர்' என்பதனைச் 'சொல்லெச்சம்' என்பதனால் வருவித்து முடித்தவர், பாயிர விருத்தியுள்ளே, 'முற்காலத்து முதனூல் அகத்தியம் என்பதூஉம், அதன் வழித்தாகிய தொல்காப்பியம் அதன் வழிநூல் என்பதூஉம் துணியப்படும்' எனவும், 'தொல்காப்பியனார் அகத்தியனாரோடு மாறுகோடலின் அகத்தியத்தோடு பிறழவும் பிற்காலத்து வீழ்ந்தன சில முந்துநூல் கண்டு அவற்றின் வழிநூல் செய்தாரெனக் கொள்ளாமோ எனின், அஃது ஆன்றோர் வழக்கோடு மாறுகொள்ளுவார் இக்காலத்துச் சொல்லினும் அடிப்பட்ட சான்றோர் சொல்லார்

ஆகலின் கொள்ளாம்' எனவும் கூறினர். இவர் கூறியது நக்கீரனர் பேராசிரியர் முதலியோர் கூறியவாறே.

இத்துணையும் கூறியவாற்றால் 'என்மனர்' என்னும் சொற்கு முடிபாக இளம்பூரணரும் பிறரும் வருவித்து முடித்த ஆசிரியர் என்னும் சொல் அகத்தியனரைச் சுட்டியதெனவே துணிக. இனி,

'என்மனர்' என்னும் சொல்லின் அகநிலை முடிபு.'

நக்கீரர் :—(இறையனர் அகப்பொருள் சூ. 1. உரை.)

'என்மனர் புலவர்' என்பது 'என்ப' என்னும் முற்றுச் சொல் குறைக்கும் வழிக் குறைத்தல் என்பதனல் பகரம் குறைத்து, 'விரிக்கும்வழி விரித்தல்' என்பதனல் 'மன்' 'ஆர்' என்பன இரண்டு இடைச்சொற் பெய்து விரித்து 'என்மனர்' என்று ஆயிற்று'...........என்பது.

இளம்பூரணர் :—நக்கீரனர் கூறியதே.

கல்லாடனர் :—இளம்பூரணர் கூறியதே.

யாப்பருங்கல விருத்தியுரைகாரர் :—(சிந்தடி குறளடி என்றிரண்டடியான், வஞ்சிநடக்கும் என்மனர் புலவர். சூ) 'என்மனர் புலவர் என்பது என்ப புலவர் எனச் சொல்லுமோ எனின் சொல்லும். என்ப என்பது நிலைமொழி; புலவர் என்பது வருமொழி; மன் ஆர் என்பன இடைச்சொல்; நிலைமொழியீற்றுப் பகரம்கெட்டு என்மனர் புலவர் என்று முடிந்ததாகலின்.' எ-து. (தொடரும்.)